பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 29 வெள்ளிக்கிழமை 14.07.2023 கதிர் 245

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ஜூலை 20 மீண்டும் தோண்டப்படலாம்

## சர்வதேச கண்காணிப்பாளர்கள் தாமாக வருகை தரமுடியும்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, ஜூலை 14

கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழி எதிர்வரும் வியாழக் கிழமை மீண் டும் தோண்டப் படலாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது. அதனைத் தோண்டுவது தொடர்பில் நேற்று நடந்த கலந்துரையாடலின் பின்னர் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத் தொடுவாய்யில் குடிதண்ணீர் குழாய்க ளைப் பொருத்துவதற்காக வீதியோரம் குழி தோண்டியபோது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைத் தோண்டுவது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தலைமையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தப் புதைகுழியின் நீள அகலத்தை இனம் காணும் பொருட்டு நடந்த பூர்வாங் கப் பணிகளின்போது 13 மனிதர்களுடையவை என்று கருதப்படும் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

அதைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டிருந்த பணிகளை மீண்டும் தொடங்குவது குறித்தும், பணிகளின் தராதரத்தைப் பேணுவது தொடர்பாகவும் நேற்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி, தொல்லியல்த் திணைக்கள அதகாரிகள், பொலிஸார், சட்டத்தரணிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மனிதப் புதைகுழி கணப்படும் இடத்தில் தேவையற்ற வகையில் அதிக புலனாய்வாளர்கள் நடமாடுவது சந்தேகத்தை ஏற.படுத்துகின்றது என்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இதேநேரம் இனி வரும் காலத்தில் இடம்பெறும் அகழ்வுப் பணியில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக தொல்லியல் மாணவர்களை ஈடுபடுத்த முடியும் என்றும் கோரிக்கை விடப்பட்டது.

இதேநேரம் அகழ்வுப் பணிகளின்போது சர்வதேசப் பிரதிநிதிகள் பிரசன்னம் அவசியமானது என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இவற்றை ஆராய்ந்த நீதிபதி புலனாய்வாளர்களில் தேவையானோர் தவிர்ந்த ஏனையோரின் நடமாட்டம் அகழ்வுப் பணிகளின்போது கட்டுப்படுத்தப்படும் என்று உறுதியளித்தார். அகழ்வுப் பணிகளில் பல்கலைக்கழக தொல்லியல்துறை மாணவர்களுக்குப் பதிலாக தொல்லியல் பீடத்தின் அனுபவம் வாய்ந்த அதிபாரிபளை இணைக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

அகழ்வுப் பணிகளுக்காகச் சர்வதேசப் பிரதிநிதிகளைத் தன்னால் நேரில் அழைக்க முடியாது என்று சுட்டிக்காட்டிய நிதிபதி, ஆனால் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாமாகக் கண்காணிப்புப் பணிகளுக்கு முன்வந்தால் தடுக்கப்பட மாட்டார்கள் என்றும் அறிவித்தார்.

## இது ரகசியம் அல்ல!

இன்று சனிக்கிழமை பிற்பகல் யாழ். நகரத்திலே ஒரு அரசியல் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள். தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள், பேசாத கட்சிகள், அரசசார்ப்புக்கட்சிகள் என்றபாகுபாடுஇன்றி அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக ஆராய்வதையும் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கட்சிகளுக்கு இடையே கருத்திணக்கப்பாட்டை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

இதனை முன்னின்று ஏற்பாடு செய்து நடத்துபவர் காசிலிங்கம் விக்னேஸ்வரன். வடக்கு கிழக்கு மாகாண

☞ 2

## சங்கிலியன் தோரணவாயில் திறப்பு ஞாயிறு

நல்லூர் இராசதானியில் அமைந்துள்ள சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்ற நிலையில் அதன் திறப்பு விழா ஜூலை 16 மாலை 5.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணமாவட்டசெயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளை நிறுவுனர் ஆறு திருமுருகன், தொல்பொருள் திணைக்கள யாழ்ப்பாண உதவி பணிப்பாளர் யு.ஏ.பந்துலஜீவவும்

☞ 2

## நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் அவசியம்

### ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் இன்றியமையாதது எனவும், அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதுடன் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான முறையான புதிய வழிமுறைகள் உடனடியாகஅறிமுகப்படுத்தப்படும் எனவும்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசு செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாவிலிருந்தும் அதிகபட்ச பெறுமதி பெறப்பட

☞ 2

## சனத்தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடிந்தால் உள்ளாட்சித் தேர்தலை ஏன் நடத்த முடியாது?

### எதிர்க்கட்சி பிரதம கொறடா கேள்வி

கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைச் செலவிட்டு சனத்தொகை மற்றும் குடியிருப்பு மதிப்பீட்டை நடத்துவதற்கு இந்த ஆட்சி தீர்மானித்துள்ளது. பெரும் தொகை நிதியைச் செலவிட்டு சனத்தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடியுமெனில், ஏன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த முடியாது?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத்

☞ 2

## 5 மாதங்களின் பின் நேற்று யாழ். வந்த தொடருந்து

ஐந்து மாதங்களின் பின் நேற்று யாழ்ப்பாணம் வந்தது யாழ். தேவி தொடருந்து. அனுராதபுரம் முதல் வவுனியா வரையான தொடர்ந்துத் தடத்தைப் சீரமைக்கும் பணிகளுக்காக நிறுத்தப்பட்டிருந்தது யாழ். தேவியின் பயணம். சீரமைப்புப் பணிகள் முடிந்தத்தை தொடர்ந்து நேற்று வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பேருந்துகளைக் கையளிப்பதற்காக வருகை

☞ 2

## சுகாதார அமைச்சர் பதவி விலகவேண்டும்

### விமல் வீரவன்ஸ வலியுறுத்து

அரசவைத்தியசாலைகளுக்கு சென்றால்உயிருக்குஉத்தரவாதம் இல்லை என மக்கள் அச்சம் கொள்ளும்நிலை தோன்றியுள்ளது. இதற்குப்பொறுப்பேற்று சுகாதாரத்துறை அமைச்சரும் சுகாதாரத்துறை அமைச்சின் செயலாளரும் பதவி விலக வேண்டும் .

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பொரளை பகுதியில் உள்ள இலங்கை கம்யூனிசக் கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சரவை உறுப்பினர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், நடைமுறையில் நிலைமைஎதிர்மறையாகஉள்ளது. பொருளாதாரப் பாதிப்பின்

☞ 2

## பாலியல் கொடுமைக்கு 17 ஆண்டுகள் சிறை

### கிளிநொச்சி மேல் நீதிமன்றம் தீர்ப்பு

சொந்த மகளான சிறுமியை அடித்துத் துன்புறுத்தியதுடன் பாலியல் கொடுமை செய்தவருக்கு 17 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கிளிநொச்சி மேல் நீதிமன்றம் புதன்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கியது.

2009ஆம்ஆண்டுசெட்டிகுளம் மெனிக்பாம்நலன்புரிநிலையத்தில் வைத்தும் அதன் பின்னரும் பதின் நான்கு வயதுடைய சிறுமியைத் துன்பறுத்தி பாலியல் கொடுமை செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபரே குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது.


வழக்கு புதன்கிழமை கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.ஏ சகாப்தீன் முன்னிலையில் தீர்ப்புகாக எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குற்றவாளிக்கு 17 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனைவழங்கப்பட்டது.

சிறுமியின் வாக்கு மூலம் மற்றும் சாட்சியங்கள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கை என்பவற்றின்

☞ 2

## சம்பந்தன் - அமெ. தூதுவர் நேற்று சந்தித்துப் பேச்சு

### தமிழர் விவகாரம் தொடர்பில் முக்கிய பேச்சு



தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின்தலைவர்இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையில் திடீர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையில் தமிழர்கள்மற்றும்பிறசிறுபான்மை சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான சமூகத்தின் கோரிக்கைகள்தொடர்பானவிரிவானஉரையாடல் இடம்பெற்றது என்று அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது ருவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவொன்றில் அமெரிக்கத் தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார். (02)



## வடக்குக்கு 24 புதிய பேருந்துகள் நேற்று அமைச்சரால் கையளிப்பு

இந்திய அரசின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகளில் 24 இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு மாகாண சாலைகளுக்கென

☞ 2

## ஹரி சங்கரிக்கு விசா தர இலங்கை அரசு மறுப்பு

### இனப்படுகொலை தீர்மானத்தின் எதிரொலி

கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஆனந்தசங்கரி இலங்கைக்கு வருவதற்கான அனுமதியை இலங்கை அரசு மறுத்துள்ளது.

ஹரிஆனந்தசங்கரி தனது டுவிட்டர் பதிவு மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

☞ 2

## வடக்கு போக்குவரத்து துறையின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

வடக்குமாகாணத்தின்போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான புதிய பேருந்துகள் மற்றும் ஆளணி பற்றாக்கறைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்பிக்கையுடன் இருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தார்,

இந்திய உதவி திட்டத்தின் கீழ் வடக்கு

☞ 2

## பாதாளக் குழுக்களின் அட்டூழியத்துக்கு அரசியல்வாதிகளும் பொலிஸும் உதவி

### கம்மன்பில பகிரங்கக் குற்றச்சாட்டு

எமது நாட்டில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. அதற்கு நிச்சயம் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவுகள் 'உதவிகள் இருந்தே தீரும்.' என்று புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

'நாட்டில் துப்பாக்கிச்சூடுகள், கொலைகள் அதிகரித்துள்ளன. இதற்குக் காரணம் என்ன?' - என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

☞ 2



## கரந்தாயில் மீண்டும் மணல் அகழ்வு மக்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும்

(ந.லோகதயாளன்)

கரந்தாயில் மீண்டும் மண் அகழ்வதற்கு நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் மூலம் அப்பகுதியின்இயற்கைவளத்திற்கு ஆபத்தி ஏறபட்டுள்ளதாக உள்ளூர் அமைப்பின் பிரதிநிதி செல்வராஜ் குற்றம் சாட்டுகின்றார்.

கிளிநொச்சி மாவட்டம் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கரந்தாய்க்குளம் பகுதியில் மணல் அகழ்வு செய்யப் படுவதனை தடுக்குமாறு நீண்ட காலமாக கோரி வந்தோம். இந்த நிலையில் அதிகாரிகள் முதல் அமைச்சர்கள் வரையில் வந்து பார்வையிட்டு மணல் அகழ்வு தடுக்கப்படும் என்று உறுதியழித்தனர். அதனைநம்பினோம். ஆனால் இந்த இடத்தில் மணல் அகழ தீண்டும் நேற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார் அவர்.

இப் பகுதி நிலம் காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானது (எல்.ஆர்.சி) எனவும் அங்கே ஏதும் அபிவிருத்தி தொடர்பில் பணிகள் மேற்கொள்ள தடைபோடும் இந்த காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மணல் அகழ்விற்கு மட்டும் இரகசிய

☞ 2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் செயலாளரான இவர் இந்தியாவுக்கு நெருக்கமானவர் என்று அறியப்படுபவர்.

அண்மையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சின்போது, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனால் முன்வைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான ஆலோசனைச் சபை (இடைக்கால நிர்வாகம்) தொடர்பான முன்மொழிவைத் தயாரித்தவர் பின்னணியில் முழு இயங்கு சக்தியாக இருந்தவரும் இவரே.

கடந்த சில ஆண்டுகளாகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஒரு முன்முயற்சியை அவர் மேற்கொண்டு வருகின்றார். அதன் அடுத்த கட்டமாக இந்த அரசியல் கலந்துரையாடல் - கட்சித் தலைவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் கூட்டும் முயற்சி இடம்பெறுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ள நிலையில் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரணிலின் இந்தப் பயணத்தையொட்டி ஏற்கனவே ஜனநாயகக் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி (முதலமைச்சர் விக்னேஸ்வரன் கட்சி) என்பன 13ஐ நடைமுறைப்படுத்த ரணிலிடம் வலியுறுத்தச் சொல்லி இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதுகின்றனர். ரணிலும் 13ஐ நடைமுறைப்படுத்துவதே இலங்கையில் மிகப் பெரிய சவால் என்பதான தோற்றப்பாட்டை ஏற்கனவே ஏற்படுத்தி வைத்திருக்கிறார். அதாவது 13 ஆவது திருத்தத்தை தீர்வாகப் பெறுவதே தமிழர்களுக்கு முடியாத காரியம் என்ற அளவில் அவரது தோற்றப்பாடு அமைந்திருக்கின்றது.

இவையெல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், ஈழத் தமிழர்கள் மீது 13தான் தீர்வு என்று திணிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிப்பதைக் காண முடிகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் அரசுக் கட்சி என்பன சமஷ்டிதான் தீர்வாக முடியும் என்று இதற்கு மாறான நிலைப்பாட்டில் பயணிக்கின்றன. இதில் முன்னணி சமஷ்டி மட்டுமே என்கிறது. தமிழ் அரசுக் கட்சி 13 இருக்கட்டும் ஆனால் சமஷ்டிதான் தீர்வு என்கிறது. இந்த இரு கட்சிகளின் தலைவர்களுமே கூட இன்றைய கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்தக் கூட்டத்தில் 13 தொடர்பில் ஏதாவது தீர்மானங்கள் எடுக்கப்படுமா என்பது தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் இதுவரையில் கருத்துக்களை வெளியிடவில்லை என்றாலும், அதற்கு முயற்சிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவே அறியமுடிகின்றது.

ரணிலின் இந்தியப் பயணத்திற்கு முன்பாக 13ஐ தீர்வாக நடைமுறைப்படுத்துவதைத் தமிழ்க் கட்சிகள் அனைத்துமே ஓரணியாக வலியுறுத்துகின்றன என்கிற தோற்றப்பாடு ஏற்படுத்தப்படுவது புதுடில்லிக்கு வசதியாக இருக்கும் என்கிற கருதுகோள் எவ்வளவுதூரம் வெற்றியளிக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாதபோதும் அதற்கான முயற்சிகள் அரங்கேறத் தொடங்கியிருப்பது ஈழத் தமிழர்களின் அரசியல் 35 வருடங்கள் பின்னோக்கி நகரத் தொடங்கியிருப்பதற்கான அறிகுறியா என்பது தீவிரமாக ஆராயப்படவேண்டியிருக்கிறது.

- இடிமின்னல் -
(idiminnal23gmail.com)

## சங்கிலியன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், நல்லூர் பிரதேச செயலாளர் அ.எழிலரசி, யாழ்ப்பாண மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவை தொடர்ந்து மந்திரிமனை அரங்கில் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையை எடுத்தியம்பும் வகையில் நல்லூரில் காணப்படும் சங்கிலியன் தோரண வாசல் யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் புனரமைக்கப்பட்டது.

மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல் அவற்றைப் பாதுகாத்து எதிர் கால சந்ததியினருக்கு அவ் மரபுரிமைச் சின்னங்களை ஒப்படைக்க வேண்டிய தார்மீகக் கடமையுடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் (JAFFNA HERITAGE CENTER) முன்னெடுக்கப்பட்ட முதலாவது செயற்றிட்டம் இதுவாகும்.

## 5 மாதங்களின் பின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையிலான அணியினரும் யாழ். தேவியின் இந்த வெள்ளோட்டப் பணியில் இணைந்திருந்தனர்.

அநுராதபுரத்தில் இருந்து ஓமந்தை வரையிலான தொடருந்துத் தடம் இந்திய அரசின் இலங்கைக்கு ரூபாய் 3 ஆயிரம் கோடி நிதி உதவியில் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தடத்தில் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் இனி தொடருந்துகள் பயணிக்க முடியும். இதனால் கொழும்பு - யாழ்ப்பாணத்திற்கான பயண நேரம் குறைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளது.

யாழ். தேவியின் வெள்ளோட்ட நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கர், யாழ். மாவட்ட மேலதிக செயலாளர் சிறி மோகன், மற்றும் வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான முகாமையாளர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## சனத்தொகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரதேசசபை, நகரசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான தனிநபர் பிரேரணை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

கலைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களுக்கு மீண்டும் அதிகாரங்களை வழங்குவதே இதன் நோக்கமாகும். எனினும் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வசன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆளுந்தரப்பின் பிரதேசசபை உறுப்பினர்களை மகிழ்விப்பதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிப்புரைக்கமைய சர்வசனவாக்கெடுப்பு நடத்தப்படுமா? தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லையெனக் கூறும் ஆட்சியாளர்களால் சர்வசன வாக்கெடுப்பை நடத்துவதற்கு பணம் இருக்கிறதா? என்பதற்கு இந்த ஆட்சி தெளிவான பதிலை வழங்க வேண்டும்.

அது மாத்திரமின்றி இந்த முயற்சியானது மக்களின் வாக்குரிமையை கேள்விக்குறியாக்கும் என்றும் சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு இந்த ஆட்சி ஏன் அஞ்சுகிறது? சனத்தொகை மற்றும் குடியிருப்பு மதிப்பீட்டை முன்னெடுக்குமாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. செப்டெம்பரில் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எனினும் பாரியதொரு தொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதே வேளை செப்டெம்பரின் பின்னர் வங்குரோத்தடைந்த நாடு என்ற பட்டியலிலிருந்து இலங்கை நீக்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. எவ்வாறிருப்பினும் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் என்று நாம் நம்புகின்றோம் - என்றார்.

## நாட்டைக் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனவும், ஆனால் அது பெரும்பாலும் அரச செலவின செயற்பாடுகளில் முன்னெடுக்கப்படுவதில்லை எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரச வருமானத்தை மறப்பது மாத்திரமன்றி எந்தவித பலனுமற்ற நடவடிக்கைகளுக்காக அரச நிதிகட்டுப்பாடுகள் பிறவிதத்தில் செலவு செய்யப்படுவதும் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்படாமையே இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள நிதிப்பிரச்சினைகளுக்கு பிரதான காரணம் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வருமான வரி மற்றும் அரச நிதி நிலைமை குறித்து ஆராய தற்போது நாடாளுமன்றத்தில் பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நேற்று (12) ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்ட போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த அறிக்கை இராஜாங்க அமைச்சரினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் கலால் திணைக்களங்கள் என்பவற்றின் வருமான இலக்குகளை அடைவதற்கான முறையான சூழலை உருவாக்குதல், அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்கான டிஜிட்டல் பொருளாதார பின்னணியை தயார் செய்தல் தொடர்பான முன்மொழிவுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகள் குறித்து மேலும் கலந்துரையாடி நாடாளுமன்ற முறைமைகள் (Ways and Means) குழுவிடம் சமர்ப்பிக்குமாறு இராஜாங்க அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், இந்த முன்மொழிவுகளை அமுல்படுத்துவதில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திய ஜனாதிபதி, பரந்த ஊடகப் பிரச்சாரத்தின் ஊடாக இது தொடர்பில் முறையாக மக்களுக்கு அறிவிக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.எம். பி. ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (02)

## சுகாதார அமைச்சர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுமொத்த சுமையும் நடுத்தர மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இலவச சுகாதார சேவை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மருந்து தட்டுப்பாடு நெருக்கடி தோற்றம் பெற்றவுடன் அவசர கொள்வனவு முறையில் திறந்த விலை மனுக்கோரல் இல்லாமல் மருந்து பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து அவசர கொள்வனவு முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பில் பெரும் சர்ச்சை தோன்றியுள்ளது. மருந்துத் தட்டுப்பாடு மற்றும் தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பில் சுகாதாரத் துறை அமைச்சர் சிறுபிள்ளை போல் கருத்துரைக்கிறார்.

மருந்து தட்டுப்பாடு, தரமற்ற மருந்து கொள்வனவினால் இலவச சுகாதார சேவையை நம்பியுள்ள நடுத்தர மக்களே தற்போது பெரும் அச்சம் கொண்டுள்ளனர். அரச வைத்தியசாலைகளுக்கு சென்றால் உயிருக்கு உத்தரவாதம் இருக்குமா என்ற நிலை தற்போது காணப்படுகிறது.

நாட்டு மக்களின் சுகாதாரம் கேள்விக்குள்ளாக்கியுள்ள நிலையில் சுகாதாரத்துறை அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர் பதவி விலக வேண்டும். தொடர்ந்து பதவி வகிக்க அவர்களுக்கு தார்மீக உரிமை கிடையாது - என்றார்.

## பாலியல் கொடுமைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் நீதிமன்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று நீதிமன்றம் தெரிவித்தது.

பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், தவறும் பட்சத்தில் மேலும் 12 மாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும், உடல், உள ரீதியாகவும் சமூகத்திலும் பாதிப்புக்களை சிறுமி எதிர் கொண்டுள்ளதனால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு மூன்று இலட்சம் ரூபா இழப்பீட்டினை வழங்குமாறும் கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வடக்குக்கு 24 புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் போக்குவரத்து மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொண்டு பேருந்துகளைக் கையளித்தார்.

வவுனியா (4), கிளிநொச்சி (4), மன்னார் (3), முல்லைத்தீவு (3), யாழ்ப்பாணம் (4), பருத்தித்துறை (3), காரைநகர் (3) என 24 பேருந்துகள் வடமாகாண சாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

கையளிப்பு நிகழ்வில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த கெட்டகொட, ரகுமான் யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் மற்றும் அதிகாரி ஜெயபாஸ்கரன், இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் எஸ்.எம்.டி.அல்விஸ், ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கையளிக்கப்பட்ட பேருந்துகளில் ஒன்றில் அமைச்சர்கள் மற்றும் விருந்தினர்கள் ஏறிப் பயணித்தும் மகிழ்ந்தனர்.

## ஹரி சங்கரிக்கு விசா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்று கனேடிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னணியில் முக்கிய நபராகச் செயற்பட்டவர் ஹரி ஆனந்தசங்கரி. இதன் காரணமாகவே அவருக்கு இலங்கை வருவதற்கான விசா வழங்க மறுக்கப்பட்டுள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது.

தனக்கு விசா வழங்க மறுத்த இலங்கையின் செயல் ஒரு பழிவாங்கும் நடவடிக்கையென்று அவர் ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

"அரசுக்கு ஏற்றதாக காணப்படும் போதே கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. கொடும்பாவிகளை எரிப்பது இலங்கையின் அரசின் தவறுகளைச் சரி செய்யாது.

கவலையளிக்கும் விதத்தில் இலங்கை எனக்கு விசா வழங்க மறுத்துவிட்டது. நாங்கள் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்திற்காகப் பழிவாங்கும் நடவடிக்கை இது. இதனால் எங்களை மௌனமாக்க முடியாது" என்று தனது ருவிட்டர் பதிவில் ஹரி சங்கரி குறிப்பிட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் சிங்கள ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பு மற்றும் வவுனியாவில் கனடாவின் தீர்மானம் மற்றும் கனேடியப் பிரதமரின் இனப் படுகொலைக் கருத்துக்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வவுனியாவில் கனடா பிரதமர் மற்றும் ஹரி ஆனந்தசங்கரியின் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

கனடாவின் தமிழர் இனப்படுகொலை நினைவுதினத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதத்திலேயே இந்த கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

# உகந்தை மலை முருகன் வருடாந்த மகோற்சவம் 18 ஆம் திகதி ஆரம்பம்





உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் மகோற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

15 நாட்கள் தொடர்ந்தும் பூஜைகள் இடம் பெற்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி தீர்த்தோற்சவம் இடம்பெற்று 03 ஆம் திகதியன்று வைரவர் பூஜையுடன் இவ்வருடத்துக்கான உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

அத்துடன் உகந்தை மலை முருகன் ஆலயத்துக்குப் பாதயாத்திரை செல்லும் ஏற்பாடுகளும் கிழக்கில் இடம்பெற்று வருகின்றது.

இலங்கையில் காணப்படும் வரலாற்று சிறப்புமிக்க தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

முருகக் கடவுளின் சூரசம்ஹார வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடைய திருத்தலமாக உகந்தை விளங்கின்றமை குறிப்பிடத்தக்கது. (02)

## வடக்கு போக்குவரத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணத்திற்கு 24 பேருந்துகள் கையளிக்கப்படும் நிகழ்வில் உரையாற்றிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது மாகாணத்திற்கென 8 பேருந்துகளை ஏற்கனவே வழங்கியமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எனினும் எமது மாகாணத்திற்கு வழங்கப்பட்ட பேருந்துகள் போதாது. மேலும் பேருந்துகள் வேண்டும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரிடமும் அமைச்சரிடமும் நான் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கின்றேன்.

அதேபோன்று, சாரதிகள், நடத்துனர்கள் பற்றாக்குறை தொடர்பிலும் தெரியப்படுத்தி அந்த வெற்றிடங்களையும் நிரப்பித்தருமாறும் கோரியிருக்கின்றேன். அதை இந்த மேடையிலும் மீண்டும் அவர்களுக்கு நான் நினைவூட்டுகின்றேன். வடக்கில் உள்ள சில சாலைகளுக்கு முகாமையாளர்களும் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. விரைவில் அதுவும் தீர்க்கப்படவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் மட்டுமல்லாது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை விரைவாக தீர்க்க வேண்டும் என்பதிலும் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார் - என்றார்.

## பாதாளக் குழுக்களின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் பொலிஸ் அதிகாரியுடன் இது பற்றிப் பேசினேன். கடந்த வருடம் நாட்டில் இடம்பெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதிலேயே பொலிஸார் நிறுத்தப்பட்டனர். இதனால் பாதாளக் குழுவினரின் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க முடியாமல் போனது. இதனால் அவர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இப்போது நாட்டில் அந்த ஆர்ப்பாட்டங்கள் போன்ற நிலைமை இல்லை. இதனால் பாதாளக் குழுக்களை அடக்குவதற்கான செயற்பாடுகளில் இறங்கியுள்ளோம் என்று அந்த அதிகாரி கூறினார்.

அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவு இல்லாமல் ஒருபோதும் போதைப்பொருள் வர்த்தகம் செய்யவோ பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுக்கவோ முடியாது என்பது சர்வதேசமே ஏற்றுக்கொண்ட உண்மை.

அதேபோல், எமது நாட்டில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தலைவிரித்தாடுகின்றன. அதற்கு நிச்சயம் அரசியல்வாதிகளினதும் பொலிஸாரினதும் ஆதரவுகள் - உதவிகள் இருந்தே தீரும். - என்றார். (02)

# வலம்புரிச் சங்குடன் 6 பேர் சிக்கினார்கள்

மிகவும் அரிய வகை பெறுமதியான வலம்புரிச் சங்கை 5 கோடிக்கும் அதிகமான விலைக்கு விற்க முயன்ற இரண்டு பெண்கள் உட்பட அறுவர் கைது செய்யப்பட்டனர்.

ஜா - எல பிரதேசத்தில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிரிந்திவளை, நிட்டம்புவ, மருதானை மற்றும் அங்கொட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வலம்புரிச் சங்கு விற்பனைக்குத் தயாராக இருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம், மேற்கொண்ட சுற்றிவளைப்பில் குறித்த 6 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (02)

## கரந்தாயில் மீண்டும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பதல் வழங்கியுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழு அலுவலர் சுகந்தனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, நேற்று முன்தினம் அப்பகுதிக்கு ஓர் கூட்டுப் பயணம் மேற்கொண்டு ஆய்வுநடத்தினோம். இருப்பினும் அனுமதி ஏதும் வழங்கவில்லை - என்றார்.

குளப்புனரமைப்பு என்னும் பெயரில் இந்த அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் மாவட்டச் செயலாளர் திருமதி. றூபவதி கேதீஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, ஏற்கனவே அப்பகுதியில் ஒரு தொகை மண் அகழப்பட்டு குவிக்கப்பட்டுள்ளது அதனை அங்கிருந்து எடுத்துச் செல்ல மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இருப்பினும் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதை கனியவளத் திணைக்களம் உறுதிப்படுத்துகின்றது. கரந்தாய்குளத்தில் எதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது என கனியவளத் திணைக்களத்தின் யாழ் அலுவலகப் பிரதிநிதி மயூரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது அந்த நிலத்தின் உரிமையாளர்களான காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் எழுத்து மூலமான ஒப்புதல் கிடைத்தமையின் அடிப்படையிலேயே தற்போது ஒரு மாத காலம் மண் அகழ அங்கே ஒரு நிறுவனத்திற்கு எம்மால் அனுமதி வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

வழங்கப்பட்டுள்ள அனுமதியில் எத்தனை சுமை (லோட்) மணல் அங்கிருந்து அகழப்படமுடியும் என்று வரையறுக்கப்படவில்லை.

சிலோபிளான்டேசன் நிறுவனத்தின் பணிக்காக குளப் புனரமைப்பு என்னும் பெயரில் இந்த மண் அகழ்வுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.


# அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளின் பிரச்சினைகள் ஆராய்வு

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் அதா உல்லா தலைமையில் நடந்தது

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதா உல்லா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்ஷார்(நளீமி)ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாநகர மற்றும் பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள். சமூக அமைப்புக்களின் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு காத்திரமான தீர்வுகள் எட்டப்பட்டன.

அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் ஆராய்ந்து நிரந்தரமான தீர்வு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துதல், வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழிமுறைகள் இனங்காணப்படுவதுடன், ஆறுகள் வடிகால்கள் முறையாகப் பராமரிக்கப்படுவதற்குத் தேவை-யான முன்மொழிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வைக்கவேண்டுமென இணைப்புக் குழு தலைவர் கேட்டுக்கொண்டார். அக்கரைப்பற்றில் அரச அலுவலகங்களுக்கான இடப்பற்றாக்குறைகாணப்படுவதாக திணைக்களத் தலைவர்கள் கோரிக்கை முன்வைத்தனர். விவசாயக் காணிகளிலிருந்து அதி உச்சப்பயனைபெறுவதற்கான வழிமுறைகள்பற்றி ஆராய்ந்ததுடன்வேளாண்மைசெய்வது தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. விவசாய வீதிகளைப் புணரமைத்தல், நீர்ப்பாசன மற்றும்சுகாதாரசேவைகளை மேம்படுத்துதல், சுத்தமான குடிதண்ணீர் வழங்குதல் போன்ற மக்களின் அத்தியவசிய தேவைகளை விஸ்தரிப்புசெய்வதுதொடர்பாகவும் கலந்துகொண்டதிணைக்களத் தலைவர்களால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. (05)



# சட்டத்தரணிகளின் உரிமைகளை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

## சர்வதேச அமைப்புக்கள் அரசிடம் வலியுறுத்து

இலங்கையில் சட்டத்தரணிகள் மட்டுமீறிய அளவில் அத்துமீறல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டியிருக்கும் சட்டத்தரணிகளின் உரிமைகளை முன்னிறுத்தி இயங்கிவரும் சர்வதேச அமைப்புக்கள், சட்டத்தரணிகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும், அவர்களது தொழில்சார் நடவடிக்கைகளில் ஏற்படுத்தப்படும் இடையூறுகளை முடிவுக்குக்கொண்டுவருமாறும் வலியுறுத்தியுள்ளன.

ஜெனீவாவில் கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமர்வில், இலங்கை தொடர்பில் சட்டத்தரணிகளின் உரிமைகளை முன்னிறுத்தி இயங்கிவரும் சர்வதேச அமைப்புக்களான சட்டத்தரணிகளுக்கான சட்டத்தரணிகள் மற்றும் சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனித உரிமைகள் நிலையம் என்பன இணைந்து வாய்மொழி மூல அறிக்கையொன்றை வெளியிட்டன. இந்த அமைப்புக்களின் சார்பில் பேரவையில் உரையாற்றிய ஜூலியா ஸ்மக்மென் சுட்டிக்காட்டியவிடயங்கள் வருமாறு -

ஐக்கிய நாடுகள் உலகளாவிய காலாந்தர மீளாய்வுக்குழுவின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் சட்டத்தரணிகள் உள்ளிட்ட செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளுக்கு ஏதுவான பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவதன் அவசியம் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக்கொண்டிருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோன்று, சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்த பரிந்துரைகளை இலங்கை ஏற்றுக்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அதேவேளை, சுயாதீனமான சட்டத்தொழில் வாண்மையாளர் ஊடாக சட்டரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான இயலுமை என்பது சட்டத்தின் ஆட்சி மற்றும் செயற்திறனாக இயங்கும் நீதிப்பொறிமுறை ஆகிய-வற்றின் அடிப்படைக் கூறுகளாகும்.

அதன்படி, எவ்வித இடையூறுகளோ,அத்துமீறல்களோ, அடக்குமுறைகளோ அல்லது முறையற்ற தலையீடுகளோ இன்றி தமது தொழில்சார் கடமைகளை முன்னெடுப்பதற்கான இடைவெளி சட்டத்தரணிகளுக்கு இருக்கவேண்டும்.

இருப்பினும், இலங்கையைப் பொறுத்தமட்டில் சட்டத்தரணிகள் மட்டு மீறிய அளவில் அத்துமீறல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். குறிப்பாக போராட்டக்காரர்களின் உரிமைகள் மற்றும் சிறுபான்மையின உரிமைகள் போன்ற அரசியல் ரீதியில் உணர்திறன்வாய்ந்த வழக்குகளில் இயங்கும் சட்டத்தரணிகள் இத்தகைய அடக்குமுறைகளை எதிர்கொள்கின்றனர்.

அதேபோன்று, சட்டத்தரணி என்ற ரீதியில் தமது பணியை மேற்கொண்ட சட்டத்தரணிகள் அதனுடன் தொடர்புபட்ட வகையில் கைதுகளுக்கும் குற்றவியல் விசாரணைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பயங்கரவாதத்தடைச்சட்டத்தின்கீழ் வலுகட்டாயமாகக் கைதுசெய்யப்பட்டமையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவரது வழக்கு விசாரணைகளின் சுயாதீனத்தன்மை குறித்து நாம் மிகுந்த கரிசனை கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர்பில் உலகளாவிய காலாந்தர மீளாய்வுக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும், தொடர் தாமதமின்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று, சட்டத்தரணிகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்து-வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அவர்களது தொழில்சார் நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதற்குஎதிராக உரிய பாதுகாப்பை வழங்குமாறும் கோருகின்றோம் என்று குறிப்பிட்டார். (05)

# கொழும்பில் சின்னம்மை 4 சிறுவரிடம் கண்டுபிடிப்பு

கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் சின்னம்மை நோய் தொற்றுக்குள்ளான நான்கு சிறுவர்கள் இனங்காணப்பட்டுள்ளன என குழந்தை நல ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை நிலைவரப்படி 12 சிறுவர்களுக்கு நோய்க்கான அறிகுறிகள் காணப்பட்டுள்ளதோடு, அதில் 4 சிறுவர்களுக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். அதிக காய்ச்சல், இருமல், மூக்கில் நீர் வடிதல், கண்களில் நீர் வடிதல் மற்றும் சிவப்பு புள்ளிகள் இந்த நோயின் அறிகுறிகள் ஆகும்.

அம்மை நோய்க்கான எம்.எம்.ஆர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதசிறுவர்களும்இந்நோயின்அறிகுறிகளுடன் இருப்பதாக வைத்தியர் மேலும் தெரிவித்தார்.

எம்.எம்.ஆர் தடுப்பூசி 09 மாதங்கள் மற்றும் மூன்று வயது சிறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு நாங்கள் பெற்றோர்களை அறிவுறுத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக அம்மை நோய் அதிகரித்து காணப்படுவதாக தெரிவித்த வைத்தியர் தீபால் பெரேரா, பிள்ளைகளுக்கு கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதால் பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வலியுறுத்தியுள்ளார். (05)

# வைத்தியசாலை உயிரிழப்புகளுக்கு மயக்க மருந்து காரணம் அல்லவாம்

வைத்தியசாலைகளில் அண்மைக்காலமாக பதிவாகும் மரணங்கள் தொடர்பில் வெவ்வேறு தரப்பினராலும் , பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான மரணங்களுக்கு சத்திர சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும் மயக்கமருந்துகளேகாரணம் எனக்கூறப்படுவதுஉண்மையல்ல என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கண்டி வைத்தியசாலையில் பூஞ்சை நோய் காரணமாக 7 நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர் என வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

குறித்த நோயாளர்களின் மரணத்துக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வைத்தியசாலையில் ஜனவரியில் ஒரு மரணமும் , ஜூன் மாதம் 5 மரணங்களும் பதிவாகியுள்ளன. அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உயிரிழந்த நோயாளர்களுக்கு பயன்படுத்தப்பட்ட மருந்து தற்போது பாவனையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று அண்மையில் கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் பெண்ணொருவர் உயிரிழந்திருந்தார்.

அவரது மரணத்துக்கான காரணம் இதய நோய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாறாக செய்திகளில் வெளியாகியுள்ளதைப் போன்று மயக்க மருந்து காரணமாக அவர் உயிரிழக்கவில்லை.

இவ்வாறு பதிவாகும் மரணங்களை மறைக்க வேண்டிய தேவையோ அல்லது அவை தொடர்பில் பொய்யான காரணிகளை வெளிப்படுத்த வேண்டிய தேவையோசுகாதார அமைச்சுக்கு கிடையாது. பிரேத பரிசோதனைகளுக்கமைய உரிய காரணிகள் வெளிப்படுத்தப்படும். - என்றார்.

இதன் போது கருத்து வெளியிட்ட சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் விசேட வைத்திய நிபுணர் சமன் ரத்நாயக்க -

நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தரக் குறைவான மருந்துகள் இறக்குமதி செய்யப் படுவதில்லை. ஆனால் சில சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்டு இறக்கு மதி செய்யப்படும் மருந்துகளாலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அவ்வாறு இனங்காணப்படும் மருந்துகள் பாவனையிலிருந்து விலக்கப்படும். எனவே, மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை. - என்றார். (05)

# கம்பஹா மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மீது பொலிஸார் தாக்குதல்

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் விசாரணைகள் ஆரம்பம்

கம்பஹா மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கம்பஹா பொலிஸில் முறைப்பாடு செய்யச் சென்றபோது பொலிஸார் தம்மைத் தாக்கினர் என்று கூறி, சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளவர் சமித திஸாநாயக்க என்பவராவார்.

குடும்ப விவகாரம் தொடர்பாக முறைப்பாடு வழங்க பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதாகவும், தனது முறைப்பாட்டைப் பதிவு செய்ய அதிக நேரமானதால், இதுகுறித்து இருமுறை கேட்டதாகவும், பின்னர் பொலிஸ் நிலைய உயரதிகாரிக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்ததாகவும், அதன் பின்னரே தனது முறைப்பாட்டை பதிவு செய்ய தன்னை அழைத்ததாகவும் தாக்கப்பட்டவர் கூறுகிறார்.

இதன்போதே பல பொலிஸார் தன்னைத் தாக்கினர் எனவும் அவர் கூறுகிறார்.

தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் எனவும் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கம்பஹா பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ரோஹன தெரிவித்தார். (05)

# மாணவி மார்பைப் பிடித்த அதிபர் விளக்கமறியலில்

விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் போது 12 வயது பாடசாலை மாணவியின் மார்பகத்தைதொட்டுபாலியல் கொடுமை செய்தார் என்ற குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதால் அதிபர் ஒருவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அநுராதபுரம் நீதிமன்ற நீதிவானும் மேலதிக நீதிவானுமான நாலக சஞ்சீவ ஜயசூரிய இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட மாணவிக்கு ஐம்பதாயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறு குற்றஞ்சாட்டப்பட்ட அதிபருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அல்லது அன்றைய தினத்தில் 12 வயது மாணவியின் மார்பகத்தை தொட்டு இந்த குற்றச் செயலை அவர் புரிந்துள்ளார். குற்றவியல் சட்டத்தின் 345 ஆம் பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட அதிபருக்கு எதிராக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. (05)

# இலங்கை இளைஞர் கனடா விபத்தில் சாவு

உயர் கல்வியைத் தொடருவதற்காக கனடா சென்ற இலங்கை இளைஞர் ஒருவர் வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் இலத்திரனியல் பொறியியலில் பட்டம் பெற்ற இவர், கலாநிதி பட்டம் பெறுவதற்காகச் சென்றபோதே இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

28 வயதான எம்.எச். வினோஜ் யசங்க ஜெயசுந்தர என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கனடாவின் வான்கூவர் நகரில் மது போதையில் வாகனம் ஓட்டியவரின் கவனக்குறைவால் இந்த மரணம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞர் கலிபோர்னியாவிலுள்ள ஆப்பிள் நிறுவனத்திலும் பணிபுரிந்துள்ளார். (05)

# பிரான்ஸ் கடற்படைக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

*பிரான்ஸ் கடற்படைக் கப்பலான லோரெய்ன் கடந்த புதன்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் கடற்படை பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்தனர்.*

*142.20 மீற்றர் நீளமுள்ள இந்த கப்பல் 154 பணியாளர்களால் நிர்வகிக்கப்படும் ஒரு வான்-பாதுகாப்பு பல்நோக்கு போர்க்கப்பல் ஆகும்.*

*இதேவேளை, குறித்த கப்பலின் கட்டளை தளபதி கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சுரேஷ் டி சில்வாவை சந்தித்தார். இலங்கையில் தரித்து நிற்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தளங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*எதிர்வரும் 15 ஆம் திகதி பிரான்ஸ் கடற்படைக் கப்பலான லோரெய்ன் இலங்கையில் இருந்து புறப் படவுள்ளது. (05)*

# தொழுநோயாளிகள் எண்ணிக்கை கொழும்பில் அதிகம்

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் தற்போது வரை கொழும்பு மாவட்டத்தில் 100 தொழுநோயாளிகள் பதிவாகியுள்ளனர் என கொழும்பிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டிலேயே அதிக தொழுநோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர் என கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இலங் கையில் அதிக காசநோயாளிகள் கொழும்புநகர எல்லையில் பதிவாகியுள்ளன என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொழுநோயாளிகள் மற்றும் காசநோயாளிகளை அடையாளம் காணாவிட்டால், அது வேறு ஒருவருக்கு பரவும் அபாயம் உள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர்.

தொழுநோயை 18 மாதங்களில் குணப்படுத்த முடியும் என்றாலும், பாதுகாக்கப்படாவிட்டால் சிக்கல்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். (05)

# வேலணை கல்வி கோட்ட விளையாட்டுப் போட்டிகள்







வேலணை கோட்ட கல்விப்பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மை திறனாய்வு போட்டி புங்குடுதீவு மத்திய கல்லூரி மைதானத்தில் வேலணை கோட்ட கல்விப் பணிப்பாளர் கா.சசிதரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி விஞ்ஞான அலகுத் தலைவர் சி. சபா ஆனந்தும்சிறப்பு விருந்தினராக தீவகக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன் சகிலனும் கௌரவ விருந்தினர்களாக சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன் மற்றும் கருணாகரன் குணாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல ஆண்டுகளுக்கு பின்னர் புங்குடுதீவு மத்திய கல்லூரியில் கோட்ட மட்ட போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது .

முதலிடத்தினை புங்குடுதீவு மத்திய கல்லூரியும் இரண்டாமிடத்தை வேலணை மத்திய கல்லூரியும் தட்டிச்சென்றன. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசமைப்பின் 13ஆவது திருத்தமும் இந்திய - இலங்கை ஒப்பந்தமும்

இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தபோது, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் மோடியை அழுத்தம் கொடுக்கச்சொல்லுங்கள்என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கேட்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கையெழுத்திட மறுத்திவிட்ட சம்பந்தன் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது நகை முரணாகத் தோன்றக்கூடும். ஆனால் இந்த இரண்டுக்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையொட்டித்தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகள் சட்டம் என்பன இயற்றப்பட்டன. ஆனால், வழக்கமான சிங்கள அரசியலின் போக்கில், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் அனைத்தையும் நீர்த்துப்போகச் செய்து, தமிழர்களுக்கு அரசியல் அதிகாரங்கள் எவையும் கிடைத்துவிடாத வகையிலேயே 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அது அப்போதைய அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜெவர்த்தனவின் தந்திர அரசியல்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் இலங்கையை பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமேயான நாடாக அன்றி, பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடாக அங்கீகரிக்கின்றது. ஒவ்வொரு இனமும் பேணிக் காக்கவேண்டிய தனித் தனி மொழி மற்றும் கலாசாரம் உண்டு என்று ஏற்கிறது. வடக்கு கிழக்கு மாகாணம் தமிழ் மக்களின் வரலாற்றுபூர்வமான வாழ்விடம் (தாயகம்) என்பதை ஏற்கின்றது. இன, மத, மொழிச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றது. தேவைப்பட்டால் ஒன்றுக்குமேற்பட்ட மாகாணங்கள் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாக அலகாக அங்கீகரித்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஒப்பந்தத்தைப் பேணிப் பாதுகாத்து அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை – கடமையை – இந்தியாவுக்கு வழங்கியிருந்தது.

இப்படிப் பல அம்சங்கள் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் சிறப்பானவையாகக் காணப்பட்டபோதும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் அவை எவையும் உள்வாங்கப்படவில்லை. 13ஆவது திருத்தம் தமிழர்களுடன் கொழும்பின் அதிகாரங்கள் எவற்றையும் பகிர்ந்துகொள்ளவில்லை. வழங்கப்பட்ட உப்புச்சப்பற்ற அதிகாரங்களையும் கொழும்பு விரும்பியபோது திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது.

அதனால்தான் 13ஐ நிராகரித்தாலும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை தமிழர் தரப்புகளால் நிராகரிக்க முடியாத நிலை உள்ளது. தமிழர்களின் அரசியல் விருப்புக்கு வேணவாவுக்கு 13 ஒருபோதும் தீர்வாக முடியாது. ஆனால், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு புதிய தீர்வைக் காண்பது சாத்தியமானது. அதனால்தான் சம்பந்தர் 13ஐ விட்டுவிட்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தியிருக்கிறார்.

சம்பந்தரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் நன்றாகத்தான் இருக்கும். இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கண்டமாதிரியும் இருக்கும். ஆனால், அரசமைப்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள 13ஆவது திருத்தத்தையே முழுமையாக நடைமுறைப்படுத்தப் பின்னடித்துவரும் கொழும்பு. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் என்று எதிர்பார்ப்பது முயல் கொம்புதான்.

இருப்பினும் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்படி கோரும் முழு உரிமையும் இந்தியாவிற்கு இருக்கின்றது. இலங்கையின் அரசமைப்பில் உள்ள 13ஐ நடைமுறைப்படுத்தும்படி கோருவதிலும் பார்க்க ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தி அதனடிப்படையில் ஒரு தீர்வை எட்டும்படி அழுத்தம் கொடுப்பதற்கான அனைத்து உரிமைகளும் இந்தியாவிற்கு உண்டு. இறைமை உள்ள இரு நாடுகளுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒரு பன்னாட்டு ஒப்பந்தம். அதன் ஒரு தரப்பான இந்தியா அதனை நடைமுறைப்படுத்தும்படி அழுத்தம் கொடுப்பதற்கான எல்லா உரிமைகளையும் கொண்டிருக்கிறது.

13ஐ தாண்டி ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி இந்திய வலியுறுத்தினால் – அழுத்தம் கொடுத்தால் – அதுவே இந்தத் தருணத்தில் ஈழத் தமிழர்களுக்குப் பெரும் அரசியல் பலத்தைத் தருவாக அமையும்.

# புரிந்தும் புரியாதது போல்

**என் .சத்திய மூர்த்தி**





இனப்பிரச்சினை என்று வந்துவிட்டாலே, தமிழ் கட்சிகள். இந்தியாவின் மூலம் அரசியல் தீர்வையும், மேற்குலக நாடுகளின் வழி, போர் குற்றங்கள் போன்ற முடிவுகளையும் அடைவது என்ற இரட்டை குழல் துப்பாக்கித் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கிக் கனகாலம் ஆகிவிட்டது.

ஆனால், இதன் காரணமாகவே, இரண்டு பிரச்சினைகளுக்கும் முடிந்த முடிவான தீர்வுகள் கிடைக்கவில்லை.

உண்மை என்னவோ, அவர்கள் கையில் இருப்பது. இரட்டை குழல் துப்பாக்கி அல்ல. மாறாக, அது, இரு புறமும் கூரான கத்தி, அல்லது ஈட்டி. ஒரு புறம் அடுத்தவரை தாக்கும் என்றால், மறுபுறம் அந்த கத்தியை பிடித்தவரையே காயப்படுத்தும் வகையிலானது.

அதனை கையாளுவதற்கு நிரம்பத் திறமை வேண்டும். அது அவர்களிடம் இல்லை. இதுவே, இனப்போர் முடிவுக்கு வந்த கடந்த பதினான்கு ஆண்டுகளுக்கான நிலை மற்றும் நிலைமை.

தமிழ்த் தலைவர்களுக்குத் தெரியாதது, அல்லது வெளியில் சொல்லாத விடயம் ஒன்று இருக்கிறது. இவர்கள் எப்போதெல்லாம் இந்தியாவை அணுகுகிறார்களோ, அது அவர்களுடைய சுயதீன முடிவுதானா, என்ற சந்தேகம்





எழுகிறது. திருவிளையாடல் திரைபடத்தில் நாகேஷ் கூறியதுபோல. மண்டபத்தில் யாரோ எழுதிக் கொடுத்ததை சபையில் படிப்பதாகவே தோன்றுகிறது.

இதுவே, கடந்த ஆண்டு, செல்வம் அடைக்கலநாதன் முயற்சியில் தொடங்கிய இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கான கடிதத்தின் பின்புலம். இப்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே புதுடெல்லி பயணப்படுவதற்கு முன்னர் தமிழர் தரப்பின் 'மோடி கடித' அரசியலுக்கான காரணமும் இதுவே.

### நோகாமல் அடி...

அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளைபொறுத்தவரையில், இலங்கை விடயத்தில், அண்டை நாடான இந்தியாவிற்கு அறிவிக்காமல், அவர்கள் எந்த முன்னெடுபையும் செய்யத் தயாராக இல்லை. இது, இனப்போர் முடிந்த காலகட்டத்திலிருந்து மாறுதலான நிலைபாடு, போர் முடிவிற்கு முன்னர் இருந்த நிலைமையின் வெளிப்பாடு எனலாம்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்தியாவின் மேலைநாடுகளுடனான உறவே இதற்குக் காரணம். இடையில், சீனாவுடன் கொஞ்சிக்கொண்டிருந்த அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள் இப்போது இந்தியாவைக் கொஞ்சும் நிலை தோன்றி உள்ளது. சீனாவின் புவிசார் அரசியல் மற்றும் இந்திய பெருங்கடல் சார்ந்த இராணுவ முன்னெடுப்புகள் அவர்களை இவ்வாறு மாற்றியிருக்கிறது. தெற்காசியா பாரம்பரியமாகவே இந்தியாவின் செல்வாக்கு மிகுந்த பகுதி என்பதை அவர்கள் மீண்டும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதாவது, தமிழர் தரப்புகளின் இந்திய பிரதமர் மோடிக்கான அண்மை கால கடிதங்கள் அனைத்துமே, மேலை நாடுகளின் முன்னெடுப்பில்தான் நிகழ்கிறது எனலாம். நீங்கள் நோகாமல் அடியுங்கள், நாங்கள் அழாமல் அழுகிறோம் என்ற வகையை சார்ந்தது. ஆனால், போகாத விருந்தாளியான, இந்தப் பிரச்சினைகளும் இங்கேயே குடிகொண்டுவிட்டன என்பதே உண்மை.

### யார் பெரியவர்?

இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்றால், அதனை அனைத்து தரப்பினரும் இதய சுத்தியுடன் மட்டுமே அணுகவேண்டும். அதில், அரசியல் மற்றும் தனிநபர் ஆதாயங்களுக்கு இடமில்லை. இலங்கை அரசு மற்றும் சிங்கள அரசியல் தலைமைகளைப் பொறுத்த வரையில், அவர்கள் தனி நபர் அரசியல் செய்வதைக் குறைத்துக் கொண்டுள்ளார்கள்.

அவர்களுடைய பிரச்சினையே, யார் ஆட்சியில் இருந்தாலும், தமிழர்களுக்கான அரசியல் முடிவை வழங்கினால், அவர்கள் தேர்தலில் தோல்வி அடைவார்கள் என்ற தவறான எண்ண வோட்டம்தான். எனவே, யார் ஆட்சியில் இருந்தாலும், அவர்களது நிலைமை ஒன்றே. ஊரை ஏமாற்ற, உலகை ஏமாற்ற, வாயில் ஒன்று, மனதில் ஒன்று என்று செயல்படுவார்கள்.

தமிழர் தரப்பு அப்படியல்ல. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற ரகத்தில் அவர்கள் இயங்குகிறார்கள். அதனால்தான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றோர், சமஷ்டி அரசு என்ற தங்களது சித்தாந்த கோரிக்கையில் இருந்து பின்வாங்குவதில்லை. இப்போது, அணிசேரக் கட்சிகள் இல்லாத காரணத்தினால், தமிழ் அரசும் சமஷ்டி குறித்து உரத்துச் சொல்லாடுகிறது.

இரு தரப்பினருக்கும் உள்ள வேறுபாடு மிகவும் குறைவு. கஜேந்திர குமார் வகையாறா, சமஷ்டித் தீர்வை ஒரேயடியாக நிறைவேற்ற வேண்டும் என்கிறது. தமிழ் அரசுக் கட்சி, இந்தியா அளித்த பதிமூன்றும் வேண்டும் தொடர்ந்து சமஷ்டியும் தேவை என்கிறது. அவ்வளவு தான்.

இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொண்டால், அவர்களிடையே கொள்கை ரீதியாக எந்தவித வித்தியாசமும் இல்லை. ஆனால், உண்மையான பிரச்சினை என்பது, கொள்கைக் கோட்பாடுகள் சார்ந்தது அல்ல. 'யார் பெரியவர்?' என்ற தனி நபர் ஈகோ குறித்த சமாச்சாரம் இது. எனவேதான், முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் அளித்த பிரதமர் மோடிக்கான கடிதத்தில், கையெழுத்திட தமிழ் அரசின் மூத்த தலைவரான சம்மந்தன் மறுத்துவிட்டார். மாறாக, தங்களது கட்சி சார்பாக, தனியாக ஒரு கடிதத்தை வரைந்து மோடிக்கு அனுப்ப இருப்பதாக அறிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்த வரையில், சென்ற வருடத்தை வைத்து நோக்கும்போது, அவர்களின் இந்த வருட உத்தி அல்லது நிலைபாடு மாறி உள்ளது. இதுவும் தனி நபர் சார்ந்த அரசியல்தான்.

கடந்த வருடம் ஜனவரி மாதம், இது போன்றே, அப்போது ஒன்றிணைந்து இருந்த கூட்டணியின் அங்கத்துவ கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முன்னெடுத்த மோடிக்கான கடிதத்தை, சம்மந்தன் 'ஹைஜாக்' செய்து, தனது கடிதமாக மாற்றிவிட்டார். இந்தமுறை, அவர்கள் அனுப்பிய வரைவு கடிதத்தை, ஒதுக்கி வைத்துவிட்டு, தனது கட்சி சார்பில் தனியாக ஒரு கடிதம் அனுப்ப இருப்பதாக அறிவித்துவிட்டார்.

அது போன்றே, கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் கடிதம், இந்த இருவரும் தவிர்த்த பிற தமிழ் தலைமைகளின் ஒருமித்த கடிதமும் இந்திய தூதுவர் மூலம் பிரதமர் மோடியை சென்றடையும்.

### புரிந்தும் புரியாததுபோல்...

இனப்பிரச்சினையில் இன்னமும் மூக்கை நுழைக்க, இந்தியாவிற்கு என்று சில வரம்புகள் உள்ளன. 'ஒருமித்த இலங்கையினுள் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளதக்க தீர்வு' என்பதே இந்தியாவின் நிலைபாடு. ராஜீவ்-ஜெயவர்தனே ஒப்பந்தம், அதன் அடிப்படையிலான பதின்மூன்றாவது திருத்தம் என்பன மட்டுமே இந்தியாவின் குறிக்கோளாக இருக்கமுடியும். அதனை முழுமையாக செயல்படுத்துவது மட்டுமே, இந்தியாவின் கோரிக்கையாக இருக்கமுடியும். பதின்மூன்றிற்கு அப்பால், சமஷ்டி உள்ளிட்ட எந்தவொரு தீர்வுதிட்டத்தையும், இந்தியா முன்வைக்க, அதனை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்ப்பது மடத்தனமானது. இராஜதந்திர நகர்வுகளுக்கு அப்பால், அனைத்துத் தமிழ் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒரு தீர்வு நகலை இந்தியாவால், முன்வைக்கமுடியாது. இலங்கை அரசுடன் முன்னெடுக்கவும் முடியாது.

இதனை தற்போதாவது புரிந்து கொண்டதினால்தான், செல்வம், சித்தார்த்தன், சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் சிறிகாந்தா-சிவாஜிலிங்கம் போன்றோர், பிரதமர் மோடிக்கான கடிதத்தில், பதின்மூன்றுடன் நிறுத்திக் கொண்டுள்ளனர். இந்த முயற்சியில், விக்னேஸ்வரனும் இணைந்துள்ளார். இந்த உண்மை, புரிந்தும் புரியாதது போல் நடிப்பதினால்தான், சம்மந்தன் உள்ளடக்கிய தமிழ் அரசு கட்சி தலைமை. பதின்மூன்றுடன் சமஷ்டியையும் போட்டுக் கலக்கிக் குழப்புகிறது.

கஜன் பொன்னம்பலத்திற்கு இது போன்ற குழப்பங்கள் இல்லை. கடந்த சில-பல வருடங்களாகவே, அவர் சமஷ்டி தீர்வை பற்றி மட்டுமே பேசிவந்திருக்கிறார். அதனால் மட்டும் அவர் கூறுவது சரியா, அல்லது செயல்படுத்த முடிந்த விடயமா என்பது வேறு.

### வரம்புகளை அறிந்துகொண்டு

இந்தியா ஆகட்டும், அல்லது அமெரிக்கா ஆகட்டும், அல்லது சீனாவே ஆகட்டும், அவர்களில் யாரும் சொல்வது அனைத்தையும் இலங்கை அரசும் சிங்கள-பௌத்த பேரினவாதிகளும் உடனடியாக ஏற்றுக்கொள்வார்கள் என்று யாராவது நினைத்துச் செயல்பட்டால் அது அவர்களது அறிவீனத்தையே குறிக்கிறது. இதுவே, பிற நாடுகளுக்கும் பொருந்தும்.

கடந்த இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தவர்களும் ஜனாதிபதிகளும் சீனாவை சார்ந்தே சர்வதேச அரங்கில் பயணப்பட்டிருக்கிறார்கள். அதற்காக மட்டும், இனப்பிரச்சினையில் சீனா, தமிழர் ஆதரவு நிலை எடுத்தால், அரசு அதனை ஏற்றுக்கொள்ளும் என்று யாரும் கூற மாட்டார்கள். இதனை அறிந்ததனால்தான், சீனாவும், வெளியே இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறது.

இந்தியாவை பொறுத்தவரை, இனப் பிரச்சினையில், முதலில் இருந்தே பங்குபெற்றமையால்தான், அனைத்துத் தரப்பினரும் இந்திய அரசோடு பேச்சு நடத்தி வருகிறார்கள். அண்டை நாட்டில் அமைதி நிலவுவது இந்தியாவின் தேவை. அதைவிட முக்கியம், இங்கு அனைத்துத் தரப்பினரின் அரசியல் உரிமைகளும் பாதுகாக்கப்படுவது. இந்தியாவின் அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் இலங்கை தரப்புகள் ஏற்றுக்கொள்கிறார்களோ இல்லையோ, அதனை செவிமடுக்கிறார்கள்.

இந்தியாவும், இனப்பிரச்சினையின் நீள-அகலங்களை நன்றாகவே புரிந்து கொண்டிருப்பதால், தன்னுடைய வரம்புகளை அறிந்துகொண்டு அதனுள்ளேயே பயணப்பட்டுவந்திருக்கிறது. இதன் காரணமாகவும்தான், இந்தியாவின் கருத்துக்கள் எல்லாம், பதிமூன்றை ஒட்டி மட்டுமே நிற்கிறது.


இதனால், எப்போதும் பதின்மூன்று குறித்து மட்டுமே பேசும் இந்தியா, அவ்வப்போது மட்டும் பதின்மூன்றிற்கும் அப்பால், அல்லது பதிமூன்று-பிளஸ் என்ற கருத்தினை ஏற்றுக்கொண்டு, அதற்கு வரி வடிவம் கொடுத்துள்ளது. அப்போதெல்லாம், அந்தச் சொற்றொடர்கள், இலங்கை அரசின் நிலைபாட்டையும் அவர்களின் முன்னெடுப்பு மற்றும் வாக்குறுதி ஆகியவற்றை ஒட்டியே அமைந்துள்ளது.

இதில், தமிழர் தரப்பு புரிந்து கொள்ளவேண்டிய விடயம் ஒன்று இன்னமும் இருக்கிறது. இந்தியா பலம் வாய்ந்த நாடு. கடந்த ஆண்டு இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு இந்தியாதான், எந்த பிரதிபலனும் எதிர்பார்க்காமல் உடனடியாக உதவியது என்பதெல்லாம் உண்மை.

இந்தக் காரணங்களுக்காக மட்டும், இலங்கை அரசு இந்தியா கூறியவற்றிற்கெல்லாம் தலையாட்டும் என்று கருதுவது தவறு. இது அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் பொருந்தும்.

காரணம், இலங்கை இறையாண்மை உள்ள ஒரு நாடு. அதனை விட முக்கியம், இனப்பிரச்சினையிலோ அல்லது வேறு ஏதாவது பிரச்சினையிலோ, நாட்டின் பெரும்பான்மை சமூகம், இந்தியா போன்ற வெளிநாட்டின் கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தால், அரசியல் ரீதியாக அரசு அதனை எதிர் கொள்ள விழையாது. அதையொட்டி, போராட்டங்கள் வெடித்தால், அதனை அரசால் எதிர்கொள்ள முடியாது.

கடந்த வருடம் அறகலயா போராட்டமும் மீண்டும் ஒரு முறை இதனையே நிரூபித்தது. அதனால்தான், இந்தியாவும், அனைத்து தரப்பினருக்குமான தீர்வுத் திட்டங்களையே ஆதரித்து வருகிறது. அதில் சமஷ்டித் தீர்வு மீண்டும் மீண்டும் அடிபட்டுப் போகிறது என்பதுதான் அப்பட்டமான உண்மை.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL



**FULL OPTION**



### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir




# அமாவாசையை பற்றிய சில தெய்வீக விளக்கங்கள்






- தமிழகத்தின் தெற்கு பகுதியில் அமாவாசையை நல்ல நாளாக பலரும் கருதுவது கிடையாது காரணம் அன்று முன்னோர்களுக்காக தர்ப்பணம் கொடுக்கிறோம் தர்ப்பணம் கொடுக்கும் நாளில் சுபகாரியங்களை செய்யக்கூடாது என்பது அவர்களது எண்ணம்.
- ஆனால் வடக்கு பகுதியில் இப்படி யாரும் கருதுவது கிடையாது. நிறைந்த அமாவாசையில் கடை திறந்திருக்கிறேன், புதிய வண்டி வாங்கி இருக்கிறேன், நிலம் பத்திரம் செய்திருக்கிறேன் என்று கூறுபவர்களை நிறைய பார்க்கலாம்.
- ஆனால் பொதுவாக அமாவாசையை நல்ல நாள் என்று பலரும் ஏற்றுக்கொள்வதில்லை.
- சரிஅமாவாசைநல்லநாளா? தீயநாளா? அமாவாசை தினத்தில் சூரியனும், சந்திரனும்நேர்கோட்டில்வருகிறதுஅதாவது ஒன்றையொன்று சந்தித்துக்கொள்கிறது அன்றுமுன்னோர்கள்புண்ணியலோகத்திலிருந்து பூமிக்கு வருகிறார்கள். தங்களது தலைமுறைகளை சூட்சமமான முறையில் கண்காணிக்கிறார்கள் அவர்களது வாரிசுகளானநாம்துவங்கும்காரியங்களை கரிசனத்தோடு பார்க்கிறார்கள், ஆசிர்வதிக்கவும் செய்கிறார்கள்.
- எனவே பிதுர் தேவதைகள் என்ற முன்னோர்களை வழிபட்டு அவர்களுக்கு மரியாதை செய்து அமாவாசை தினத்தில் புதிய காரியங்களை துவங்கினால் நிச்சயம் நல்லதே நடக்கும் அன்று நற்காரியங்களை செய்வதனால் தீங்கு ஏற்படாது. முன்னோர்கள் பூமிக்கு வரும் தினம் என்பதனால் அது நல்லநாளே.
- இந்துக்களில் தை அமாவாசை, ஆடி அமாவாசை மற்றும் புரட்டாசி,மாசி அமாவாசை மிகவும் சிறப்புடையது.
- முன்னோர் வழிபாட்டுக்கு மிகவும் சிறந்த நாள் அமாவாசை! இது அனைத்து மதத்திற்கும் பொருந்தும்.
- அமாவாசையன்று உலகை இயக்கும் சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்வதால் ஒரு காந்த சக்தி ஏற்படுகிறது.
- அமாவாசையன்று மாமிச ஆகாரம் தவிர்ப்பது பெரும் ஜீவகாருண்யமாகும்.
- அமாவாசையன்று பிறக்கும் குழந்தைகளின் மூளை பிற்காலத்தில் அதீதமாக வேலை செய்யும் என்று விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.
- ஜோதிட ரீதியாக அமாவாசை நிறைந்த நாள்.
- சூரிய கலையும், சந்திர கலையும் சேருவதால் சுழுமுனை என்னும் நெற் றிக்கண் பலப்படுகிறது. அதனால் அமா வாசையில் சாஸ்திரிகள் மந்திர ஜெபம் ஆரம்பிக்கின்றனர். கடலில் நீராடி தங்களுக்கு ஏற் பட்ட தோஷத்தைப் போக்குகின்றனர்.
- அமாவாசையன்று ஜீவ சமாதிகள் புதிய உத்வேகத்தைப் பெறுகின்றன. அனேக குரு பூஜைகள் அதிஷ்டான பூஜைகள் அமாவாசையன்று நடத்துகின்றனர்.
- சாதாரணமாக இறந்த ஆவிகள் சந்திரனின் ஒளிக் கற்றையில் உள்ள அமிர்தத்தைப் புசிக்கும். அதுதான் அதற்கு உணவு.
- அமாவாசையன்று சந்திரனின் ஒளிக்கற்றை ஆவிகளுக்குக் கிடைக்காது. அதனால் ஆவிகள் உணவுக்குத் திண்டாடும். பசிதாங்கமுடியாமல்இரத்தசம்பந்தமுடைய வீடுகளுக்கு வரும்.அப்போழுது நம்மையாராவதுஎண்ணுகிறார்களா,நமக்குத் தாப்பணம், படையல் செய்கிறார்களா என்று பார்க்கும்.
- வீடு வாசல் இல்லாத ஏழைகளுக்கு அமாவாசையன்று அன்னதானம் செய்ய வேண்டும்.ஒவ்வொருஅமாவாசையன்றும் தங்களால் இயன்ற அளவு உணவை அன்னதானம் செய்யலாம். பசு, காகம், நாய், பூனைமற்றும்இதரஜீவராசிகளுக்கும் அன்று அன்னம் அளிக்கலாம்.
- அமாவாசை பிதூ தாப்பணம் மற்றும் அன்னதானம்ஆகியவற்றைக்குலதெய்வம் இருக்கும் இடத்தில் செய்வது நல்லது. முடியாதவாகள் தங்கள் இஷ்ட தெய்வம் இருக்கும் இடத்தில் செய்யலாம். வீட்டிலும் செய்யலாம்.
- உற்றார், உறவினா தொடாபு இல்லாத ஆவிகள் மரம், செடி கொடிகளில் அமாவாசையன்று மட்டும் தங்கி, அவற்றின் சாரத்தைச் சாப்பிடும். அதனால் அமாவாசையன்று மட்டும் மரம், செடி, கொடிகளையோ காய்கறிகளையோ புல் பூண்டுகளையோ தொடக்கூடாது. பறிக்கக் கூடாது.
- நகரங்களில் வசிப்பவர்கள் அமாவாசையன்று ஏழைக் குழந்தைகளுக்கு அல்லது ஆதரவற்றவர்களுக்கு முன்னோர்களைநினைத்துஅன்னதானம்செய்ய வேண்டும். இதர தானங்கள் தருவது அவரவர் வசதியைப் பொறுத்தது.
- எதுவும்செய்யமுடியாமல்இருப்பவர்கள் ஒரு பசு மாட்டிற்கு ஒன்பது வாழைப் பழங்கள் அமாவாசை அன்று கொடுக்க வேண்டும். இதற்குச் சாதி, மதம், இனம் என்ற வேறுபாடு இல்லை.
- முன்னோர்கள் ஆத்மா சாந்தியடைய ஒவ்வொருவரும் இதைச் செய்யவேண்டும்...

**நாதன் குருக்கள்**
**சிட்னி, ஆஸ்திரேலியா**

# வாழ்வின் வெற்றிக்கு வழி காட்டும் கல்வி



'வெற்றி என்பது நிழலை போல நாம் அதை தேடி போக முடியாது வெளிச்சத்தை நோக்கி நடக்கும் போது அது நம்முடன் சேர்ந்து பயனிக்கும் என்பது வாழ்வில் வெற்றியீட்டிய பலரால் கண்டறியப்பட்டதும் உணரப்பட்டதுமான விடயமாகும். வெற்றி என்பதன் மூலம் கருதிக்கொள்ளப்படுவது யாதெனில் தூரநோக்கான நம் வாழ்விற்கு இது அவசியம் என நம்மால் இலக்கிடப்பட்டதும் அந்த இலக்கை அடைந்த போது வெளிப்படும் அதீத மகிழ்வின் பிரதிபலிப்பே எனக்கொள்ளலாம். சுருக்கமாக நாம் வாழ்ந்த வாழ்வில் அல்லது வாழ்கின்ற வாழ்வில் அடையும் மேன்மை. இத்தகைய வெற்றி நம் வாழ்வில் எப்போது கிடைக்குமென அறிதியிட்டு கூற முடியாது. ஆனால் முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற கொள்கையில் ஒருமுறையேனும் வெற்றியை ஈட்ட வாய்ப்புக்கிட்டும் என்பதில் ஜயமில்லை. மனித வாழ்வில் எந்த ஒரு மனிதனும் முயற்சி கல்வி என்ற விடயங்கள் இல்லாது வெற்றியடைந்ததாக சரித்திரம் இல்லை.

என்னதான் நம் வாழ்வில் சிறு சிறு வெற்றிகளை சேர்த்து வைத்திருந்தாலும் அந்த வெற்றிகளில் கல்வியின் பங்கு சிறிதளவேனும் இல்லாவிட்டால் அந்த வெற்றிகள் அடுத்தகணமே இருந்த இடம் தெரியாது நிலைகுலைய வாய்ப்புக்கள் பல உண்டு.எனவே மனித வாழ்வின் வெற்றிக்கு கல்வி இன்றியமையாதது ஒன்றாகும்.

'கண்ணுடையார் எல்லாம் கற்றார் முகத்திரண்டு புண்ணுடையார்'; என்கிறார் வள்ளுவப்பெருந்தகை. அதாவது கண்பார்வை தெரியக்கூடியவர்கள் கல்வியறிவுடைய கற்றோர் என்றும் புண்களையுடைய திரண்ட முகத்தை உடையவர்கள் கல்வியறிவில்லாத கற்காதோர் என்கிறார்.கல்வி என்பது பிறப்பு முதல் நம் இறப்பு வரை பயணிக்கும்.ஆனால் நாம் வெற்றியால் ஈட்டிய பெருமையோ நாம் இறந்ததன் பின்பும் நிலைத்துநிற்கக்கூடியது. இதற்கு ஆபிரகாம்லிங்கனின் வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டாக அமைகின்றது.இவருடைய தந்தையார் சாதரண செருப்புத்தைக்கும் வியாபாரியாக இருந்தாலும் அவர் தனது முயற்சியாலும் தான் கற்ற கல்வியின் பயனாலும் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி எனும் சிறப்புப்பெயரிற்கு உரித்தானவராக காணப்படுகின்றார். மனித வாழ்விற்கு வறுமை என்பது விதிவிலக்கல்ல. எனவேமனிதவாழ்விற்குகல்வியால்ஈட்டியவெற்றியே அவசியமாகும்.கல்வியின் பயனால் ஈட்டிய வெற்றியே பெருமையைப்பெற்றுத்தரவல்லது. இது நிலைத்து நிற்கும் தன்மை உடையது.கல்வி இல்லாதவிடத்து கல்வி இருந்து எந்தப்பயனும் இல்லை.

மேற்கூறியவாறு கல்வி முயற்சியால் ஈட்டிய வெற்றி என்பவற்றின் முக்கியத்துவத்தையும் அவற்றிற்கிடையிலான தொடர்பு பற்றியும் நோக்கினோம்.அடுத்து கல்வியின் சிறப்பு அவசியம் மற்றும் அதன் பயனில் வெற்றியை ஈட்டுவதன் பங்கு பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறார் ஔவையார்.எவ்வளவு வறுமை வந்தாலும் கற்பதை கற்பதை மட்டும் நிறுத்தக்கூடாது என்கிறார். கிட்டத்தட்ட 300 ஆண்டுகளின் முன்பே தமிழர்கள் ஒப்பற்ற இலக்கியங்களை படைக்கும் அளவிற்கு கல்வியறி வுடையவர்களாக காணப்பட்டனர்.இதற்கு அக்காலத்தில் எழுதப்பட்ட எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்கள் சான்றளிக்கின்றன. அவர்கள் அக்காலத்தில் எழுதப்பட்ட எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்கள் சான்றளிக்கின்றன.அவர்கள் அக்காலத்தில் அந்த அளவிற்கு கல்வியறிவுடையவர்களாக காணப்பட்டமையாலேயே தமிழ் எனும் மொழி தமிழர்கள் எனும் இனம் உலகம் எங்கும் பல்லாயிரக்கணக்கான பெருமைக்கும் புகழுக்கு உரித்தாக முக்கிய காரணமாகும்.

அடுத்து கல்வியின் சிறப்புப் பற்றி நோக்குவோமானால் நம் வாழ்வை நெறிப்படுத்தி நெறிப்படி ஒழுக வைக்கும் கருவியே கல்வி ஆகும். இதுவே நம் வெற்றிக்கு வழி காட்டும் சிறப்புமிக்க கருவியாகும்.'இந்த உலகையே மாற்றி வெற்றிப்பாதையில் செல்ல வைக்கக்கூடிய ஆயுதம் ஒன்று உண்டு.அதுதான் கல்வி' என்கிறார் புரட்சியாளர் நெல்சன் மண்டேலா.'படிக்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருந்திருக்கலாம்'என்கிறார் பிளாட்டோ. அது மட்டுமல்லாமல் தாம் ஈட்டிய வெற்றியால் புகழ் பெற்ற தோமஸ் அல்வா எடிசன் அல்பட் ஜன்ஸ்டின் மற்றும் ஜசாக்நியூட்டன் போன்றோர் கூறிய கருத்துக்கழும் கல்வியை வலியுறுத்தும் இத்தகைய கருத்துக்களே ஆகும். கல்வி நம் வாழ்வை நெறிப்படுத்தி சமூகத்தில் நன்மதிப்பைப்பெற உதவுவது.கல்விநமது ஒழுக்கம் மற்றும் நேரத்தின் மதிப்பை சீரற புகட்டுகின்றது.இங்கு அதாவது வெற்றியை ஈட்டுவதில் கல்வியின் சிறப்பு யாதெனில்வாழ்வில் வெற்றியீட்ட ஒழுக்கம் மற்றும் நேர முகாமைத்துவம் என்பன இன்றியமையாத ஒன்றாகும். அத்தகையவற்றை நமக்கு அறியத் தருவதே அல்லது கற்பிப்பதே கல்விதான்.சங்கமருவியகாலத்திலேயே புகழ் பெற்ற திருவள்ளுவர் ஒழுக்கம் இல்லாதவிடத்து உயர்வு இருக்காது என்பதை'அழுக்காறு உடையான் கண் உயர்வு' என்கிறார். அதாவது ஒழுக்கம் இல்லாவிட்டால் வெற்றியை அடையமுடியாது என மறைமுகமாக கூறுகின்றார்.



அடுத்துகல்வியின்அவசியம்பற்றிநோக்குவோம். 'மன்னனிற்கு அவனது இடத்தில் மட்டுமே சிறப்பு'என்பது முதுமொழியகும்.கல்வி நமது அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.கல்வியை நாம் கற்றாலே நாம் வருங்காலத்தில் தப்பிப்பழைக்கலாம்'என்பது இக்கால சிறார்களினதும் சமுதாயத்தினதும் கருத்தாகும்.ஏனெனில் உலகமெங்கும் கல்வி கற்றவனுக்கு ஒரு சிறப்பு கல்வி கற்காதவனிற்கு ஒரு சிறப்பு. இங்குகல்விகற்றவனிற்கேஎங்குசென்றாலும் முதன்மை இடம். இதற்கு இக்கால சமூகம் முக்கிய எடுத்துக்காட்டாகும். இங்கு வெற்றியில் கல்வியின் பங்கு பற்றி நோக்குவோமா னால் வெற்றிக்கு அறிவென்பது இன்றியமையாத ஒன்றாகும் .நாம் முட்டாளாக இருந்தால் நம்மை யார் வேண்டுமானலும் ஏமாற்றலாம். ஆறிவை வளர்ப்பது கல்வி ஆகும். எனவே இங்கும் வெற்றி என்பது கல்வி இன்றியமையாதது என்பது புலப்படுகின்றது.

அடுத்து கல்வியின் பயன்பற்றி நோக்கினால் இதுவும் ஒரு வகையில் வெற்றி என்றே கருதப்படும். 'ஒருவன் கல்வியை கற்பதன் மூலம் வெற்றியை அதாவது பயனை அடைந்தானாயின் அவன் மீண்டும் கல்வி கற்பதையே விரும்புவான்." என்பது கூற்றாகும். ஏனெனில் வாழ்வில் வெற்றிக்கு கல்வி அவசியம் என கற்றுணர்ந்தவர் அறிவான். பொதுவாக நாம் பெறும் பயன் நமக்கு மட்டும் பயன் பெறுவதாய் அமையக்கூடாது. நமக்கும் நம் சமூகத்திற்கும் நம் நாட்டிற்கும் பயன்பெறுவதாய் இருக்க வேண்டும். இதுவே உண்மையான வெற்றியாகும். அறியாமையில் இருப்பவர்களிற்கு கொடை செய்ய விரும்பினால் கல்வி அறிவைப்பெற வாய்ப்பளியுங்கள். நம் நாட்டில் அனைவரும் கல்வியறிவுடன் இருந்தால் நம் நாடு வெற்றிபாதையில் செல்ல வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. மேற்கூறியவாறு வெற்றியில் கல்வியின் சிறப்பு அவசியம் பயன்பங்காற்றும் விதம் பற்றி விரிவாக நோக்கினோம்.எனவே நாம் வாழ்வில் வெற்றியீட்ட கல்வி என்பதே முதன்மை ஆயுதம் என உணர்ந்து கல்வி மேன்மை அடைவோம்.'படிப்பால் மட்டுமே பாராளச்செய்யலாம்'என்கிறார் அப்துல்கலாம். படிப்பால் பாரையே ஆழலாம் எனும் போது நம் வாழ்வில் எவ்வித வெற்றியையும் அடையலாம் என்பது தெளிவாகப்புலப்படுகின்றது.மீண்டும் வலியுறுத்துகின்றேன் வெற்றியென்பது நிழலைப் போல வெளிச்சம் என்பது கல்வியைப்போல கல்வியை நாம் கற்க கற்க வெற்றியை நோக்கி நாம் வெற்றிநடைபோடுவோம்.எனவே இத்தகைய சிறப்புடைய கல்வியைக்கற்று வாழ்வின் வெற்றிக்கு வழிகோலுவோமாக!



**செல்வி. குணசீலன் ஷாருனா**
**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.**

காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.நாவும் உலக நாடுகளும் இனியாவது தாமதிக்காமல் மனித உரிமை விசாரணையை நடத்த முன்வரட்டும்

## புதைகுழிகள் குறித்து தமிழர் வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்து

கொக்குதொடுவாயில் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இனியாவது தாமதிக்காமல் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்த ஐ.நாவும் உலக நாடுகளும் முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள தமிழர் வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல் முருகன், உலக நாடுகளை ஒன்றுதிரண்டு மத்திய அரசாங்கத்துக்கு தமிழக அரசாங்கம்போதியஅழுத்தம் கொடுக்கவேண்டும்எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

தமிழீழத்தில் 2008-2009 ஆம் ஆண்டில் லட்சக்கணக்கான தமிழர்களைச் சிங்கள படை கொன்றுகுவித்தது. குறிப்பாக, சிங்களப் படையின் குண்டு வீச்சிலிருந்து உயிர்தப்ப, பதுங்குகுழிகளுக்குள்ஒன்றன் மேல் ஒன்றாகப் பலநாள் படுத்திருந்த சிறுவர்கள் பட்டினியால் துடித்துத்துடித்துச் செத்துப்போனார்கள்.

உயிர்பிழைக்கவெட்டப்பட்ட பதுங்கு குழிகள் அவர்களின் மரணக் குழிகள் ஆயின. அடுக்கப்பட்டதுபோல், கிடந்த அச்சிறுவர்களின் பிணங்களை அப்படியே மண் போட்டு மூடினார்கள். சிறுவர்கள்மட்டுமல்ல, பெரியவர்களும் இப்படித்தான் பதுங்கு குழிகளுக்குள் படுத்து மரணத்தைத் தழுவினர்.

வெற்றிவாகை சூடிக் கொண்டதாக இராசபட் அறிவித்த அந்தக்கடைசி இருநாள்களில் (16, 17.05.2009), உயிர்காக்க அங்குமிங்கும் அலமந்து ஓடிய மக்களை எறிகணைகளாலும் எந்திரத் துப்பாக்கிகளாலும் குறி இலக்கு எதுவுமின்றி கைபோன போக்கில், கண்போன போக்கில் சுட்டுப் பல்லாயிரக் கணக்கானோரைப் பிணமாக்கினர். படுகாயமுற்று மருந்தின்றி துடித்துத் துடித்துச் செத்தோர் பல ஆயிரம் பேர்.

அத்துயரத்தை எண்ணி கலங்கிய உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமிழீழ மக்களுக்கு எதிரான இனப்படுகொலைப் போர் குறித்தும், அதன்விளைவுகள் குறித்தும், உலக அளவில் ஏற்புடைய புகழ்பெற்ற நீதிபதிகள் குழு ஒன்றின் தலைமையில் புலனாய்வும், விசாரணையும்நடத்தஐ.நா. முன் வர வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

ஆனாலும், ஐ.நாவும் முன் வரவில்லை; வழக்கம் போல் இந்திய ஒன்றியும் கவலை கொள்ளவில்லை. ஏனென்றால், செத்தவர்கள் தமிழர்கள் காணாமல் போனவர்கள் தமிழர்கள்.

இந்நிலையில், முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 29 ஆம் திகதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக குழியொன்றுதோண்டப்பட்ட போது, கொத்து கொத்தாக பெண்களின் உள்ளாடைகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்பட்ட 20 இற்கும் மேற்பட்ட 'மனித புதைக்குழிகள்' தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதி என்பது, 1984 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலம் வரை முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தவை. இறுதி போரின் போது, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர் எனவும், அவ்வாறுசரணடைந்தவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனவும் அச்சமயத்தில் குற்றச்சாட்டு எழுந்தது.

இந்தகுற்றச்சாட்டுக்களை இராணுவம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றது.

இச்சூழலில், முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில், மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றமை வாயிலாக, சிங்கள பௌத்த பேரினவாத அரசின் இரத்த வெறி அம்பலப்பட்டுள்ளது.

எனவே, இனியாவது தாமதிக்காமல், மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த ஐ.நாவும், உலக நாடுகளும் முன் வர வேண்டும். உலகநாடுகளைத் திரட்ட ஒன்றிய அரசுக்கு, தமிழ்நாடு அரசு போதிய அழுத்தம்கொடுக்கவேண்டும் என்றுதமிழகவாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது.

இது ஒருபுறம் இருக்க, அறிவாற்றல், போராற்றல் அர்ப்பணிப்பு, விடுதலை வேட்கை ஆகியவற்றின் உருவமாகத்திகழும், உலகத் தமிழர்கள், ஈழம் தனி நாடாவதற்கான புரட்சியை முன்னிலும் பல மடங்கு வேகமாக முன்னெடுக்க வேண்டிய நேரமிது.

ஆயுதக்குழுப்போராட்டம் என்பது மக்களை ஈர்க்காது; ஈழம் தனி நாடாவதற்கான கோரிக்கையை எழுப்பும், இலட்சியஇளைஞர்கள்ஒன்று திரள வேண்டும்.

எல்லாமேமுடிந்துவிட்டது என்று நம் எதிரிகள் கருதுகிறார்கள். எல்லாமே புதிய திசையில் இனிமேல் தான் தொடங்குகிறது என்று அவர்களுக்குநாம்பறைசாற்ற வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் சுட்டிக்காட்டுகிறேன். - என்றார். (05)

# மைத்திரி நஷ்டஈடு வழங்கும் விவகாரம்; நீதிமன்றமே இறுதி முடிவை எடுக்குமாம்

## அருட் தந்தை சிறில் காமினி கூறுகிறார்



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில்பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு தொகையை முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன செலுத்துவது குறித்த தீர்மானத்தைநீதிமன்றமே தீர்மானிக்கும்.

இவ்விடயம் தொடர்பாக எந்தக் கருத்தையும் எங்களால் கூற முடியாது என கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட் தந்தை சிறில் காமினி அடிகளார் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுதொகையைவழங்குவதற்கான 6 மாத கால அவகாசம் புதன்கிழமையுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால கடந்த ஜுன் 28 ஆம் திகதியன்று 15 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன், எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை 2024 ஜுலை முதல் முதல் 2033 ஜுன் வரையான 10 ஆண்டு காலப் பகுதியில் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் குறித்து அருட் தந்தை சிறில் காமினி அடிகளாரிடம் வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனதுசட்டத்தரணிகள்ஊடாக தாக்கல் செய்துள்ள மனுவில் எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை செலுத்தவதற்கு கால அவகாசத்தை கேட்டுக்கொண்டுள்ளார் என ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன்.

உயர் நீதிமன்றத்திற்கு மனுவொன்று சமர்ப்பித்துள்ளதால், இது குறித்த கருத்துக்களை எங்களால்கூறமுடியாது. உயர் நீதிமன்றமே இது குறித்து தீர்ப்பை வழங்க முடியும். - என்றார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலைத் தடுக்க தவறியதன் ஊடாக அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு, அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு 100 மில்லியன் ரூபா இழப்பீட்டை செலுத்துமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்த தீர்ப்புக்கு அமைய, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 15 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளார் எனவும், எஞ்சியுள்ள இழப்பீட்டுத் தொகையான 85 மில்லியன் ரூபாவை 2024 ஆம் ஆண்டு ஜுன் 30 முதல் 2033 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30 வரை 10 ஆண்டுகாலத்திற்குதவணை வாரியாக செலுத்துவதற்கு அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா 75 மில்லியன் ரூபாவும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 50 மில்லியன் ரூபாவும், முன்னாள்தேசியபுலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸுக்கு 10 மில்லியன் ரூபாவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம்உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய பாதுகாப்பு அதிகாரி உட்பட மூவர் கைது

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகளின் மின் கேபிள்களையும், 18 ஆம் கட்டைக்குஅருகிலுள்ள நுழைவாயிலின் வர்ண சமிக்ஞை அமைப்பையும் வெட்டி அகற்றிய குற்றச்சாட்டில் தொழிற்சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரியையும் மேலும் இருவரையும் கட்டுநாயக்க பொலிஸார் புதன்கிழமை கைது செய்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் நுழைவாயிலில் உள்ள 18 ஆவது கட்டை மின்கம்பத்தில் உள்ள வர்ண சமிக்ஞை அமைப்பின் மின்சார விநியோக கேபிள்கள் வெட்டிக் கொண்டு செல்லப்பட்டதால் இரண்டு வாரங்களாக சமிக்ஞை கட்டமைப்பு செயலிழந்து கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அதேபோன்று, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் மூடப்பட்ட தொழிற்சாலைகளில், சீமெந்து மற்றும் இரசாயனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றின் பிரதான மின்சார கம்பிகளும் இரகசியமாக வெட்டப்பட்டுள்ளன.

பொலிஸாரின் விசாரணையின் பின்னர், சீதுவை மற்றும் இரசாயன தொழிற்சாலையின் பிரதான பாதுகாப்பு அதிகாரியே அவற்றை திருடியது தெரிய வந்துள்ளதுடன், சீதுவ பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய அதிகாரி சந்தேகத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தவிர, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மூடப்பட்ட பல தொழிற்சாலைகளுக்குள் புகுந்து அங்குள்ள மின்விநியோக அமைப்புகளின் வயர்களை வெட்டிய குற்றத்துக்காக மாத்தளையைச்சேர்ந்த 35 வயதுடைய ஒருவரும் கஹட்கஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரும் கட்டுநாயக்க பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டபோது, இவர்களிடமிருந்து ஹெராயின் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

# டெங்கு ஒழிப்பு அதிகாரிகளுக்கு நியமனம் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் கிடைக்கும்

## சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்

டெங்கு ஒழிப்பு அதிகாரிகளினது நியமனங்களை நிரந்தரமாக்காவிட்டால் எமது ஆட்சியில் நிறைவேற்றுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

டெங்குஒழிப்புபணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் சேவையை நிரந்தரப்படுத்த சுகாதாரஅமைச்சர்கெஹலிய ரம்புக்வெல்ல விருப்பம் தெரிவித்த போதிலும், அது தொடர்பான அமைச்சரவை பத்திரம் அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு முன்னரும் இதே போன்ற பல அமைச்சரவைப்பத்திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவது கடினம் என்றாலும், இவர்கள் 7 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் டெங்கு ஒழிப்புக்கு 22 ஆயிரம் ரூபா உதவித்தொகையுடன் பணியமர்த்தப்பட்ட அரச ஊழியர்கள் என்பதால், 180 நாள் சேவை நாள்களுக்குள் நிரந்தரமாக்கல் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தும் அது அவ்வாறு அமுல்படுத்தப்படவில்லை என்றும், இதனால் 1,105 அதிகாரிகள் கைவிடப்படும் நிலைக்கு நிலைமை மாறியுள்ளதாகவும், இந்த அதிகாரிகளின் உரிமைகளுக்காக எதிர்காலத்திலும் போராடுவோம்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த போது ஆட்சேர்ப்புசெய்யப்பட்ட இந்த அதிகாரிகளை, அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகிய இத்தரப்புக்கு நியாயத்தைப் வழங்கதற்போதையஜனாதிபதியாலும், செயலாற்றமுடியாத அரசாங்கத்தாலும் முடியாவிட்டால் கிட்டிய எதிர்காலத்தில் உதயமாகும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் குறித்த நியமனங்களை நிரந்தரமாக்குவதாகத் தெரிவித்தார். (05)

# பனங்காட்டில் வீடு உடைத்து நகை, பணம் திருட்டு

அம்பாறை, அக்கரைப்பற்றுபனங்காட்டில்பூட்டியிருந்த வீட்டை உடைத்து தொலைக்காட்சி பெட்டி, 2 பவுண் தங்க ஆபரணங்கள், பணம், கையடக்கத்தொலைபேசிகளை புதன்கிழமை அதிகாலை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர் எனவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி தெரியவருவதாவது

பனங்காடு வைத்தியசாலையிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் வேளாண்மை காவலுக்கு சம்பவதினமான செவ்வாய் மாலை 6 மணிக்கு சென்றதையடுத்து, அவரது மனைவி பிள்ளைகள் வீட்டை பூட்டிவிட்டு மனைவியின் தாயாரின் வீட்டுக்கு நித்திரைக்காகச் சென்று புதன்கிழமை காலை 5.30 மணிக்குவீட்டிற்குதிரும்பினர்.

இதன்போது வீட்டின் மேல்மாடி கதவை உடைத்து வீட்டுக்குள் புகுந்ததிருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சி பெட்டி, 2 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் பணம், கையடக்கத் தொலைபேசிகளை திருடிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக தடயவியல் பிரிவினர் மோப்பநாய் சகிதம் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்தனர். (05)

# டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நியமனம் கோரிப் போராட்டம்

## காரைதீவில் நடந்தது

அனைத்து இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய டெங்கு தடுப்பு உதவியாளர்கள், கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிவரும் தங்களை நிரந்தர ஊழியர்களாக்குமாறு கோரி காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை காலை போராட்டமொன்றை ஆரம்பித்த நிலையில், அது தொடர்கிறது.

அவர்கள் தற்காலிகமாக பந்தல் அமைத்து, சுலோகங்களை ஏந்தியவாறு சத்தியாகிரக முறையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற அனைத்து இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர் சங்கத்தின் கல்முனை பிராந்திய தலைவர் கூறுகையில் - கடந்த பல வருடங்களாக டெங்கு தடுப்பு உதவியாளர்களாகக் கடமையாற்றும் எங்களை அரசால் நிரந்தரமாக நியமிக்க முடியாமல் இருக்கிறது. எங்களுக்கான நிரந்தர நியமனம் சுகாதார அமைச்சின், சுகாதார திணைக்களத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும். தினம் 730 ரூபா அளவில் கிடைக்கும் சம்பளம் இப்போதைய நாட்டின் நிலைமைக்கு போதாமல் இருக்கிறது.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் பல்வேறு முக்கிய அதிகாரிகளுக்கு எங்களின் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும், இதுவரை எங்களுக்கான தீர்வு கிட்டவில்லை. விரைவில் அரசாங்கம் எங்களுக்கான நிரந்தர தீர்வை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அத்தோடு, நிரந்தர நியமனம் தொடர்பில் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (05)



# துருக்கிப் பெண்ணிடம் கோப்ரல் பாலியல் சேட்டைவிட்டுக் கைது

கண்டியிலிருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றில் வைத்து துருக்கிய சுற்றுலா பெண்ணிடம் பாலியல் சேட்டை செய்தார் எனக் கூறப்படும் இராணுவ கோப்ரல் ஒருவரை தம்புள்ளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் வவுனியா பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவமுகாமில் பணி புரியும் கோப்ரல் எனவும் இவர் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த துருக்கிய பெண் பஸ்ஸில் பயணித்த பயணிகளுக்கு அறிவித்ததையடுத்து, அவர் பிடிக்கப்பட்டு தம்புள்ளை தலைமையக பொலிஸாரிடம் பயணிகளால் ஒப்படைக்கப்பட்டார்.

பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விசாரணைகளின்போது அவர் இராணுவ கோப்ரல் என தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தம்புள்ளை தலைமையக பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஹஷிஸ் போதைப்பொருளுடன் கற்பிட்டியில் இளைஞன் கைது

புத்தளம் கற்பிட்டி பகுதியில் ஹஷிஸ் போதைப்பொருளுடன் ஒருவர் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் விடேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 73 கிராம் 800 மில்லி கிராம் ஹஷிஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக இதன் போது தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி நகரில் கடையொன்றில்வைத்துபோதை வியாபாரத்தை முன்னெடுத்து வருவதாக என கிடைக்கெப் பெற்ற இரகசியத் தகவலுக்கமையவே குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் ஒருவரென இதன்போது தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹஷிஸ் போதைப்பொருள் 5 லட்சத்துக்கும் அதிக பெறுமதியென இதன்போது தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட ஹஷிஸ் போதைப்பொருளையும் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளைகற்பிட்டிபொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்தனர். (05)

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

# இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம் 3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# புற்றுநோய்க்கான மருந்துகள் அமெரிக்காவால் அன்பளிப்பு



இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் ஜூலி சாங், சிறு குழந்தைகளுக்குத் தேவையான புற்றுநோய்க்கான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருள்களை சுகாதார அமைச்சிடம் புதன்கிழமை கையளித்துள்ளார்.

53.03 மில்லியன் டொலர் பெறுமதியான இந்த மருந்துப் பொருள்கள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கையளிக்கப்பட்ட மருந்துகளில் குழந்தை பருவ தோல் நோய்கள், மூட்டுவலி மற் றும் புற்றுநோய்க்கான 16 வகையான மருந்துகள் உள்ளடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



# பீடி விலையை அதிகரிக்க முடிவு

பீடி ஒன்றின் விலையை 4 ரூபாவால் அதிகரிக்குமாறு, பீடி உற்பத்தி தொழில் துறையினர் கோரியுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மதுவரித் திணைக்கள ஊடகப் பேச்சாளரும் மேலதிக மதுவரி ஆணையாளருமான கபில குமாரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பீடியின் விலையை அதிகரிக்க, அந்தத் தொழிற்துறையினருக்கு சட்டரீதியான தடை எதுவும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், புதன் கிழமை முதல் ஒரு மாத காலத்துக்கு மதுவரித் திணைக்கள அதிகாரிகளை வழமையான சேவையில் இருந்து விலக்கி புகையிலை கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்த மதுவரித் திணைக்கள ஆணையாளர் தீர்மானித்துள்ளார். (05)






# வீதி புனரமைப்பு



மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உலக வங்கியின் நிதி உதவியுடன் 72 மில்லியன் ரூபா செலவில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்ட கொக்குவில் சத்துருகொண்டான் தன்னாமுனை வீதிகளை புதன் கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மக் கள் பாவனைக்குத் திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி செயலாளர் யு.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வர்த்தக, வணிக மற்றும் உணவுபாதுகாப்பு இராஜங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோ கத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# எச்சரிக்கை



இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள 'இரத்தினபுரி போதனா வைத்தியசாலை, எம்பிலிபிட்டிய மாவட்ட வைத்தியசாலை மற்றும் தெலிகம மாவட்ட வைத்தியசாலை' ஆகியவை 8 கோடி ரூபாவுக்கும் அதிகமான மின் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் (இன்று) நிலுவைத் தொகையைச் செலுத்தாவிட்டால் குறித்த வைத்தியசாலைகளின் மின்சாரம் துண்டிக்கப்படும் எனவும் இது தொடர்பான கடிதம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. (05)

# கொக்கைன், போதைப் பொருள் மாத்திரைகளுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கம்பஹா, ரத்தொலுவ வீட்டுத் தொகுதியில் கொக்கைன் மற்றும் போதைப்பொருள் மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபருக்குச் சொந்தமான கடைக்கு பின்னால் போதைப்பொருள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 26 கிராம் கொக்கெய்ன் மற்றும் 2,250 மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். 37 வயதுடைய சந்தேக நபரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பெறப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் கருத்து பூச்சாண்டி காட்டும் செயல்

## போராளிகள் நலன்புரி சங்கம் கிண்டல்

புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகளிற்கு தொழில்வாய்ப்புக்களோ அல்லது வாழ்வாதாரங்களையோ அரசாங்கம் செய்ய தவறிவிட்டதன் காரணமே போராளிகள் நலன்புரி சங்கம் திறந்துவைக்கப்பட்டது என போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் அரவிந்தன் தெரிவித்தார்.

குறித்த சங்கத்தில் இடம்பெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், போராளிகள் நலன்புரி சங்கம் தொடர்பாக பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் போராளிகள் நலன்புரி சங்க அலுவலகத்தில் விடுதலைப்புலி உறுப்பினர்களின் புகைப்படங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியமை தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச் சர் டிரான் அலஸ் விசாரணைகளை முன்னெடுக்குமாறு தெரிவித்துள்ளமை புலிப்பூச்சாண்டி காட்டும் செயற்பாடு எனக் கூறினார்.

14 வருடங்கள் கடந்தும் எங்களுக்கான திட்டமிடல்களும் இல்லாத நிலையில் இந்த இடத்திற்குள் வந்துள்ள இந்த சாந்தர்ப்பத்தில் தங்களது குரல் வளையை நெரிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# சமஷ்டி ஒருபோதும் சாத்தியமாகாதாம்!

## ஆளும் தரப்பு கூறுகின்றது

தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரும் சமஷ்டி தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது. அரசு அதனை அனுமதிக்காது. கூட்டாட்சி என்ற சமஷ்டி எனப்படுவது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது.

- இவ்வாறு இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குத் தமிழ்க் கட்சிகள் கடிதம் அனுப்புவது குறித்து அரசின் நிலைப்பாடு தொடர்பாக ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப்பயணம் திட்டமிட்டபடி இம்மாத இறுதியில் நிகழும். இலங்கை தொடர்பாக இந்தியத் தரப்புக்குப் பல விடயங்கள் தெரிவிக்கப்படும்.

குறிப்பாக இந்தியா தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகின்றது. இதனால், தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களுக்கு ஜனாதிபதி அதிகம் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை இந்தியத் தரப்புக்குத் தெளிவுபடுத்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு முட்டிமோதிக் கொண்டு கடிதம் அனுப்புவது பயனற்றது. அரசியல் இலாபம் கருதியே தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்து கொள்கின்றன.

13ஆவது திருத்தச் சட்ட நடைமுறை உடனடி சாத்தியமற்றது. நாடாளுமன்றத்தின் மூலமே இது அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சமஷ்டி தீர்வைக் கோருகின்றன. இது ஒருபோதும் சாத்தியமற்றது. அரசு இதற்கு அனுமதி வழங்காது. கூட்டாட்சி எனப்படும் சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது. இருக்கின்ற அரசமைப்பை மறுசீரமைத்து அல்லது புதிய அரசமைப்பு மூலம் நாட்டு மக்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்துக்குள் வழங்குவார். - என்றார். (02)

# அரசின் அதிரடி அறிவிப்பினால் குறிவைக்கப்படும் பேருந்துகள்

அனுமதிப் பத்திரம் இன்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுப்படும் பஸ்களைக் கண்டறியும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுமதிப்பத்திரம் இன்றி இயங்கிய நான்கு பஸ்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுதொடர்பான சோதனை நடவடிக்கைகளுக்காக 4 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னம்பிட்டி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற பஸ் விபத்தைத் தொடர்ந்து, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்காலிக அனுமதிப்பத்திரத்தில் இயங்கிய அனைத்து பஸ்களையும் போக்குவரத்தில் இருந்து அகற்றுவதற்கு அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையைப் பாராட்டுவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (05)

# வெட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு

வெட்டுக்காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

காலி - அம்பலாங்கொடை பிரதேசத்தில் இன்று (13) காலை குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய எஸ்.பி. லசந்த என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 10 மணிக்குப் பின்னர் வீட்டிலிருந்து காணாமல்போன குறித்த இளைஞர், இன்று காலை 6 மணியளவில் வீட்டுக்கு 200 மீற்றர் தொலைவில் வெற்றுக் காணியொன்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

# சூட்டுக் காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம்

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம் இன்று (13) மீட்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை - வலஸ்முல்லை பிரதேசத்தில் வீதியோரத்தில் குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வீரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர், வலஸ்முல்லை பிரதேசத்திலுள்ள மரக்கறி சந்தையொன்றில் உதவியாளராகப் பணியாற்றினார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் பாதாளக்குழுக்கள் செயற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2023இல் வெளியிடப்பெற்றது.